# திருக்கோயில்

ஏப்ரல் 1993 விலை ரூ 3





தொலைபேசி எண்: 421676

அருள்மிகு

# வடபழநி ஆண்டவர் திருக்கோயில்

வடபழநி, சென்னை-26.

## அறிவிப்பு

இத்திருக்கோயிலின் சார்பில் வடபழநியில் அழகிரி நகர் நெடுஞ்சாலையில் மினி, டீலக்ஸ் என்ற இரு திருமண மண்டபங்கள் திருக்கோயிலுக்குப் பின்புறம் வெகுஅருகில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

வாடகை விபரம்:

| மினி | | டீலக்ஸ் | |
|---|---|---|---|
| 1—வது நாள் | ரூபாய். 5,000[- | 1—வது நாள் | ரூபாய் 7,500[- |
| 2—வது நாள் | ரூபாய் 4,000[- | 2—வது நாள் | ரூபாய் 6,500[- |

மேற்படி திருமண மண்டபத்தில் பாத்திரங்கள் மற்றும் பர்னிச்சர் வ॰திகள் உள்ளது.

இந்தத் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமணங்களுக்கு அருள்மிகு வடபழநி ஆண்டவர் திருக்கோயிலில் அர்ச்சனை செய்து மணமக்களுக்கு மரியாதை செய்யப்படும்.

இந்த திருமண மண்டபங்கள் அருள்மிகு வடபழநி ஆண்டவர் கோயில் அருகில் உள்ள காரணத்தினால் பெண், மாப்பிள்ளை அழைக்கும் வசதி உள்ளது.

திருமண மண்டபங்கள் செல்லும் சாலை நூறு அடி ரோடு இணைப்பு உள்ள காரணத்தினால் போக்கு வரத்து வசதி உண்டு.

திருமணத்திற்கு அனைத்து உபயோகத்திற்கு சுவையான தண்ணீர் திருவான்மியூரில் இருந்து லாரி மூலம் சப்ளை செய்யப்படும். இது திருமண மண்டப கட்டணத்தில் அடங்கும்.

திருமணமண்டபத்தில் மணமகன், மணமகளுக்குப்படுக்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக அறைகள் மற்றும் தங்குவதற்கு பல அறைகள் உள்ளன.

திருமண மண்ட்பத்தில் மெல்லிசைக் கச்சேரிகள் மற்றும் நாட்டியம் நடத்த பெரிய மேடை வசதி உண்டு.

திருமணத்திற்கு வருபவர்கள் வரும் வாகனங்கள் நிறுத்த மிகுந்த அளவ இடம் ஒதுக்கப்பட்டு உள்ளது.

திருமண மண்டபத்தில் ஆண்கள் மற்றும் பெண்களுக்கும் தனித் தனியாக குளியலறை மற்றும் டாய்லட் வசதிகள் நிறைய உள்ளன. மற்ற விபரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் தெரிந்து கொள்ளலாம்.

**பி.சி. ராமமூர்த்தி, ஆர். சுப்பிரமணியன்**
அறங்காவலர்கள்

**தி. உதயராஜ், பி.ஏ.**
உதவி ஆணையர்[நிர்வாக அதிகாரி

முகப்பு:
பழமுதிர்ச்சோலை
அருள்மிகு சுப்பிரமணியர்

# திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
119, உத்தமர் காந்தி நெடுஞ்சாலை,
சென்னை — 600 034
தொலைபேசி எண்: 479407

ஆசிரியர்:
கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph.D.

மாலை 35 | திருவள்ளுவர் ஆண்டு 2024 ஸ்ரீமுக ஆண்டு சித்திரை | ஏப்ரல் 1993 விலை ரூ. 3-00 | மணி: 4


**திருக்கோயில் வாசகர்களுக்கு அறிவிப்பு**

அன்பு வாசகர்களே! வணக்கம்

திருக்கோயில் திங்கள் இதழின் உறுப்பினர்களாகச் சேர விருப்பம் உள்ளவர்கள்

**உயர்திரு ஆணையர் அவர்கள்**
**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை**
**சென்னை — 600 034**

என்ற முகவரிக்கு பணவிடை அல்லது வங்கி வரைவோலை மூலம் பணம் அனுப்பிச் சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளலாம்.

**சந்தா விவரம்**

| | | | |
|---|---|---|---|
| அரை ஆண்டு | — | ரூ. | 18-00 |
| ஓர் ஆண்டு | — | ரூ. | 36-00 |
| ஆயுள் | — | ரூ. | 300-00 |

சந்தாதாரர்கள் முழுமுகவரியைத் தெரிவிக்க வேண்டும்.
முகவரியில் மாற்றம் இருப்பின் உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

**எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.**

## பொருளடக்கம்


திருக்கோயில் கலைக் கூடம்
—மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள்

அருளாளர்களின் அருள் அனுபவம்
—திருமந்திரச்செம்மல் டி.வி. வெங்கட்ராமன் ஐ.ஏ.எஸ்.

சிவபெருமானின் அரிய திருக்கோலங்கள்அறுபது
—கோயிற் கலைச் செல்வர் தி. இராச மாணிக்கம்.

திருச்சியாத்த மங்கை
—புலவர் பொன் திருக்கண்ணபுர சுப்பிரமணியன்.

கந்தவேள் கருணை
—டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

ஆடல்காணீரோ திருவிளையாடல் காணீரோ
—கம்பன் கவிநய வே. தியாகராஜன்

சித்திர பாரதம்—செவ்வேள்

கீதைக் குறள்கள்
—அறநெறியண்ணல் கி. பழநியப்பனார்

நம் நாட்டுச் சித்தர்கள்
—டாக்டர் இரா. மாணிக்க வாசகம்

அக்கமாதேவி அருள் வரலாறு
—டாக்டர் சாந்தா ஞானதேசிகன்

மாமனும் மாமியும் நீ
—பேராசிரியர் திருமதி சுமதி குமாரசாமி

திருக்குடநீராட்டு விழா தத்துவம்
—டாக்டர் சிவபிருந்தா தேவி


**ஸ்ரீ முக தமிழ்ப்புத்தாண்டு நல்வாழ்த்துகள்**

**இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை வெளியீடு**

# திருக்கோயில் கலைக்கூடம்

மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் **ஜெ. ஜெயலலிதா** அவர்கள்



தமிழ்நாடு சட்டசபையில் அறநிலையத் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்துக்கு முதல் அமைச்சர் **டாக்டர் புரட்சித்தலைவி ஜெ. ஜெயலலிதா** அவர்கள் 15.4.93 அன்று பதில் அளித்தார்.

பகல் 1-25 மணிக்கு பேசத் தொடங்கிய அவர் 2-35 மணிக்கு முடித்தார். அவர் பேச்சு விவரம் வருமாறு:

திருவாரூரில் உள்ள உலோகத் திரு மேனிகள் பாதுகாப்பு மையத்தில் தற்போது குளிர்சாதன வசதி பொருத்தப்பட்டு விட்டது. அந்த உலோகத் திருமேனி மையத்தில், 2185 உலோகத் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டு உள்ளன. இந்த மையத்தில் உள்ள விக்கிரகங்களுக்கு, தற்போது வாரத்தில் மூன்று நாட்கள் பூஜை செய்யப்பட்டு வருகிறது.

உலோகத் திருமேனிகள் பாதுகாப்பிற்கான மேலும் மூன்று மையங்கள், முறையே திருநெல்வேலி, மதுரை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் அமைக்கப்பட உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உற்சவ விக்கிரகங்களின் புகைப்படம் எடுத்து, தொல்பொருள் ஆய்வுத் துறையில் பதிவு செய்யப்பட்டு வருகின்றன. இதுவரை, 2,617 திருக்கோவில்களில் உள்ள 24,372 உலோகத் திருமேனிகள் புகைப்படம் எடுக்கப்பட்டு, தொல்பொருள் ஆய்வுத் துறையில்பதிவு செய்யப்பட்டன என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவில் சம்பந்தப்பட்ட, அரிய கலைகளினை விளக்கிக் காட்டும் பொருட்களையும், திருக்கோவில் உபயோகத்தில் உள்ள பழமை வாய்ந்த பொருட்களையும், இந்து சமயத்தத்துவத்தை விளக்கிக் காட்டும் படங்களையும், திருக்கோவில் உலோகத் திருமேனிகளின் உருவங்களையும், திருக்கோவில்களில் பயன்படுத்தப்படும் பழங்காலத்து நகைகளின் புகைப்படங்களையும், வாகனங்கள், இசைக் கருவிகள், பூஜைக்காக பயன்படுத்தப்படும் பொருட்கள் போன்றவைகளையும் எளிதில் சுற்றுலா பயணிகள் கண்டு களிக்கும் வண்ணம், **திருக்கோவில் கலைக்கூடம்** ஒன்றினை, சென்னை, மகாபலிபுரம் சாலையில் 40லட்சம் ரூபாய் செலவில் அமைக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

இதற்கு தேவையான நிதியை, உபரி நிதி உள்ள திருக்கோவில்களில் இருந்து பெற்று, இக் கலைக்கூடம் அமைக்கப்படும்.

இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களில் இருந்தும், பக்தர்கள் வருகை தந்து, புனித நீராடி, வழிபாட்டினை மேற் கொள்ளும் புகழ் பெற்ற திருக்கோவில், ராமேசுவரத்திலுள்ள ராமநாத சுவாமி திருக்கோவில் ஆகும்.

இத்திருக்கோவிலில் அமைந்துள்ள, சிற்ப எழில்மிக்க பிரகாரங்களின், அழகினைக் கண்டு களிக்க, அயல் நாட்டவர்களும் அதிக அளவில் வருகை புரிகின்றனர். ஆகவே பிரசித்தி பெற்ற இந்த திருக்கோவிலுக்கு, வருகை தரும் பக்தர்களுக்கு அனைத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், திருக்கோவில் அமைந்துள்ள தீவினை அழகுபடுத்தவும் 'ஒருங்கிணைந்த திட்டம்' .ஒன்றினை வகுத்து, செயல்படுத்த, அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறுபடை வீடுகளில் ஒன்றான, பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் பழனி குன்றின் மீது அமைந்துள்ளது.

இத்திருக்கோவிலை சுற்றி அமைந்துள்ள மலைப்பகுதி, மலை அடிவாரம், பாதைமற்றும் அதன் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றை அழகு படுத்தவும், அங்கு வருகை தரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்தவும், 'ஒருங்கிணைந்த திட்டம்' ஒன்றினை வகுத்து செயல் படுத்த, அரசு முடிவெடுத்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவில்களுக்குச் சொந்தமாக, 18716 ஏக்கர் தரிசு நிலங்கள் உள்ளன. இந்த நிலங்களினால் திருக்கோவில்களுக்கு, தற்போது எவ்வித வருமானமும் இல்லை. எனவே

இத்தகைய நிலங்களின் மண்வளம், நீர் வளம் ஆகியவற்றை ஆராய்ந்து, அவைகளில் மா, தென்னை, சவுக்கு, முந்திரி மற்றும் தேக்கு போன்ற பயன் தரக்கூடிய மரங்களை பயிர் செய்யலாம் என்றும், இந்தப் பணியினை, வனத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையின் உதவி கொண்டு, மேற்கொள்ளலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய நிலங்களிலிருந்து கிடைக்கின்ற பலன்களை, ஒவ்வொரு ஆண்டும் சம்பந்தப்பட்ட திருக்கோவிலும், உதவி புரியும் துறையும், சம அளவில் பங்கிட்டுக் கொள்வார்கள். இந்த திட்டத்தினால் திருக்கோவில்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்களை பாதுகாப்பதோடு, ஓரளவு வருவாயும் பெறுவாய்ப்பு ஏற்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவிலின், ஆயிரங்கால் மண்டபத்தில, 1962-ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட திருக்கோவில் கலைக்கூடம், தற்போது பழுதடைந்த நிலையில் உள்ளது.

இந்த கலைக்கூடத்தினை 10 இலட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து, திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் கண்டு களிக்கும் வகையில் அமைக்கப்படும்.

பெரியார் மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரியில் அமைந்துள்ள பண்ணாரி மாரியம்மன் திருக்கோவில், ஒரு புகழ் பெற்ற பிரார்த்தனைத் தலமாகும். இத்திருக்கோவில் அமைந்துள்ள பகுதியில், மலைவாழ் மக்கள், பின்தங்கிய வகுப்பினர் பலரும் வாழ்கின்றனர்.

இந்தப் பகுதியில வாழும் பெண்கள் பயன் பெறும் வகையில் பெண்களுக்கான பாலிடெக்னிக் ஒன்று, பண்ணாரி அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் உபரி நிதியில் இருந்து, அடுத்த கல்வி ஆண்டில் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு ஊழியர்களுக்கு உள்ள சிறப்பு சேம நல நிதி திட்டத்தைப் போல, திருக்கோவில் பணியாளர்களுக்கும், ஒரு சிறப்பு சேம நல நிதி திட்டம் அறிமுகப்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக, 10 இலட்சம் ரூபாய், வைப்பு நிதியாக செலுத்தப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையிலிருந்து ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு, அவர்களுக்குக் கிடைக்கும் தொகையினுடன், 500 ரூபாய் சேர்த்து வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ், ஆண்டு வருவாய், 1 இலட்சம் ரூபாய்க்கு மேல் பெறும் திருக்கோவில்களில் பணிபுரியும் பணியாளர்கள் பயன் பெறுவார்கள். திருக்கோவில் பணியாளர்கள், அவர்களுடைய ஊதியத்திலிருந்து, மாதா மாதம் 20 ரூபாய் செலுத்த வேண்டும். அவர்கள் பணியில் இருந்து ஓய்வு பெறும் பொழுது, அவர்களால் செலுத்தப்பட்டுள்ள தொகை, மற்றும் அதற்குரிய வட்டி, இதற்காக தனியே ஏற்படுத்தப்படும். 20 இலட்சம் ரூபாய் வைப்பு நிதி மூலம் பெறப்படும் வட்டியிலிருந்து,ஓய்வு பெறும் பணியாளருக்கு 500 ரூபாய் சேர்த்து வழங்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த திட்டத்தின் மூலம் 8,000 பணியாளர்கள் பயன் பெறுவர்.

உதவி ஆணையர் நிலை, மற்றும் அதற்கு மேல் நிலையில் உள்ள திருக்கோவில்களில் 4,165 பேர், அலுவலர்களாக பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் ஒரே நிலயில் 15 ஆண்டு காலத்திற்கும் மேலாக, பதவி உயர்வு எதுவும் இன்றி இருந்து வருகின்றனர்.

இவர்களுக்கு தேர்வு நிலை ஊதியம் நிர்ணயித்து 10 ரூபாயிலிருந்து 50 ரூபாய் வரை ஊதிய உயர்வு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் 1,000 திருக்கோவில் பணியாளர்கள் பயன் பெறுவர்.

திருக்கோவில்களில் தற்போது பணிபுரிந்து வரும் பூசாரிகள் மற்றும் அர்ச்சகர்களுக்கு, முறையாக அன்றாட பூஜை வழிபாடுகளை செய்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு 'புத்தொளி பயிற்சி திட்டம்' அறிமுகப்படுத்தப்படும் என்று, சென்ற ஆண்டு மானியக் கோரிக்கையின்போது அறிவித்திருந்தேன்.

இந்த புத்தொளி பயிற்சித் திட்டம், 10 மையங்களில் நடைபெற்று வருகின்றது. இதில் 500 பயிற்சியாளர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள் என்பதனை தெரிவித்துக் கொள்கிறேன். இது போன்று, புத்தொளி பயிற்சித் திட்டம், அடுத்து வரும் ஆண்டில், இதர மாவட்ட மையங்களிலும் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று கோரிக்கைகள் வந்திருப்பதால், மற்ற இடங்களிலும் புத்தொளி பயிற்சி மையங்கள் தொடங்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திருக்கோவில்களுக்குச் சொந்தமான குடியிருப்பு வீடுகள், மற்றும் கடைகளின் வாடகை, அவ்வப்போது உயர்த்தப்பட்டு வருகின்றது. இருந்தபோதிலும், அவை நியாயமான வாடகையாக, இருக்க வேண்டும் என்பதற்காக, மாவட்டம்தோறும், 'நியாய வாடகைக் குழு' அமைக்க, தமிழ்நாடு திருக்கோவில் நிர்வாக வாரியம் முடிவு செய்து, குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த குழுக்கள் விரைவில், திருக்கோவில்களுக்குச் சொந்தமான கட்டிடங்களைப் பார்வையிட்டு, நியாய வாடகையை நிர்ணயிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். இதனால், திருக்கோவில்களுக்கு இன்னும் கூடுதலாக வருவாய் கிடைக்கும்.

பழங்காலத்து இசைக் கருவிகளை கோவில்களில் வாசித்து, தற்போது வயது முதிர்வினால் ஓய்வு பெற்று, வறுமையில் வாடும் இசைக் கலைஞர்களில், 100 நபர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதம் ஓய்வூதியம், அரசு நிதியிலிருந்து வழங்க இந்த அரசு முடிவு எடுத்துள்ளது.

**இவ்வாறு மாண்புமிகு முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் பேசினார்கள்.**



# அருளாளர்களின் அருள் அனுபவம்

திருமந்திரச்செம்மல்

**டி.வி.வெங்கட்ட்ராமன் ஐ.ஏ.எஸ்**

*திருமிகு தலைமைச் செயலாளர் அவர்கள்*



**(21)**

திருவருளில் நிற்பவர்கள் அருளாளர்கள், அவர்களுடைய வாக்கு இறைவனுடைய திருவாக்காகும். அவர்கள் நிறைமொழி மாந்தர், அவர்களுடைய உள்ளத்திலிருந்து வெளிப்படும் மறைமொழியே மந்திரமாகும். வேதங்களும், ஆகமங்களும், திருமுறைகளும், பிரபந்தங்களும் அவ்வாறே அருளாளர்களுடைய உள்ளங்களிலிருந்து வெளிப்பட்ட இறைவனுடைய வாக்காகும். அவை 'இறைவன் நூல்' 'நாதன் உரை அவை' (திருமந்திரம்).

திருஞானசம்பந்தர் ஓர் ஒப்பற்ற அருளாளர், உலகம் கடந்த சிவஞானத்தை உணர்த்தப் பெற்றவர். எனினும், வேத விதிகளின்படி அவருக்கு உபநயனம் செய்வதற்குரிய சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஒரு பிறப்பும் வராத நிலைமையை உடையவர் ஆளுடைப்பிள்ளையார். உபநயன நிகழச்சியில் ஆயிரம் ஆயிரமாகிய வேதங்களை அங்கு வருகை தந்த பெரியோர்கள் முன்னிலையில் ஓதி அருளுகின்றார். அவர்களுடைய ஐயங்களை போக்கும் வகையில் சிந்தையில் கூடிய ஐயப்பாடுகளை தெளிய வைக்கின்றார். எல்லாவற்றிற்கும் மேலாக முதன்மை பெற்ற எல்லா மந்திரங்களும் தோன்றுவதற்கு காரணமாகிய சிவபெருமானது ஐந்தெழுத்தே என்று எடுத்து உபதேசிக்கின்றார்.

சிவஞானம் உணரப்பெற்ற காரணத்தினால் திருஞானசம்பந்தர் அந்தவகையில் உலகோருக்கு மந்திரத்தின் முடிவான நிலையை விளக்கமுடிகின்றது. சேக்கிழார் பெருமான் இதை அழகாக எடுத்துக்கூறுகின்றார்.

'மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ்
செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்
முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்ற
முதலாகு முதல்வனா ரெழுத்தஞ் சென்பார்
'அந்தியினுண் மந்திரமஞ் செழுத்து மே' யென்
றஞ்செழுத்தின் றிருப்பதிக மருளிச் செய்தார்

(திருத்தொண்டர்புராணம் - திருஞானசம்பந்த நாயனார் 2164)

அருளாளர்களின் திருவாக்கின் தன்மையைப் பற்றி மேலும் சிந்திக்கலாம். அவர்கள் தாம் பெற்ற இறை அனுபவத்தை நமக்குத் தெரிந்த மொழிகளில் சொல்கின்றார்கள். அவர்களுடைய இறை உணர்வு முழுமையும் மொழிகளின் வாயிலாக வெளிக்கொணர வேண்டும். நாம் பேசும் மொழிகள் பலஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து மாறி வந்துள்ளன. இந்த மொழிகள் நம்முடைய புலன்கள் கருவிகளோடு இணைந்துள்ளன. புலன்களும் கருவிகளும் பொருட்கள்பால் சென்று பொருள் சம்பந்தப்பட்ட அறிவை நமக்குத் தருகின்றன. அந்த அறிவு நம்முடைய உடலில் ஏற்படும் அனுபவத்தின் அடிப்படையில் அமைகின்றது. இந்த அறிவினை ஒருவரோடு ஒருவர் பரிமாறிக்கொள்ள மொழியினை பயன்படுத்துகின்றோம். ஆகவே பொதுவாக நம்முடைய மொழிகள் புலனறிவு சம்பந்தப்பட்ட அளவே நிற்கின்றன.



மொழியைப் பயன்படுத்தி நமது அனுபவங்களை விளக்க முற்படுகின்றோம். மொழி என்பது எழுத்துக்கள், அவற்றின் ஒலி ஆகியவற்றின் சேர்க்கையாகும். ஒலியானது நம் உள்ளிருந்து வெளிவருவதாகும். எனவே, மொழிக்கு இருப்பிடம் நமது உள்ளமாகும். வார்த்தைகளை வாய் வழியாக உச்சரிக்கின்றோம். மொழிக்கு இருப்பிடம் நமது மூளையின் ஒரு பகுதியென்றும். அந்தப் பகுதியில் தான் நமது எண்ணங்கள் எழுத்து வடிவம் பெறுகின்றன என்றும், பிறகு வாய் வழியாக அதற்கான ஒலியை எழுப்புகின்றோம் என்றும் இவ்வாறாக மொழியாற்றல் பேசும் திறன் ஆகியவை உடம்பின் கூறுகளின் ஒரு பகுதியாக அமைந்துள்ளன என்றும், மூளையின் இயக்கமே எழுத்து ஒலி வடிவம் பெறுகின்றது என்றும் விஞ்ஞானிகள் கருதுகின்றனர். இப்பொழுதுள்ள சொற்களின் அமைப்பையும், அவற்றின் வரலாற்றையும் ஆராய்ந்து பார்த்தால் விஞ்ஞானிகள் கொடுக்கும் விளக்கம் ஏறக்குறைய சரியானது என்றே கருதத் தோன்றும். புலன்களையும், கருவிகளையும் நாம் பயன்படுத்திச் செய்கைகளில் ஈடுபடும்பொழுது தேவையான சொற்றொடர்கள் காலப் போக்கில் இந்தச் செயல்களை விளக்க உருவகப் பெற்றுள்ளன என்பது உண்மைதான். அதாவது, அன்றாட அனுபவத்தை விளக்குவதற்கு நம்மிடையே தேவையான சொற்கள் இருக்கின்றன. அந்தச் சொற்கள் காலக்கிரமத்தில் தேவைக்கேற்ப பல மாறுதல்களையும் பெறுகின்றன. நாம் பொருள்களைப் பற்றிய அனுபவம் பெறப் பெற புதிய சொற்களை உருவாக்கும் ஆற்றலும் நமக்கு உண்டு என்பதால புதிய சொற்களும் அகராதியில் இடம் பெறுகின்றன. இவற்றையெல்லாம் பார்க்கும் பொழுது மொழியமைப்பு மனிதனின் ஆற்றலுக்கு உட்படுகிறது அந்த ஆற்றலால் மொழி வளருகிறது. பரிணமிக்கின்றது என்றெல்லாம் கருதுவது இயற்கை என்றே தோன்றுகின்றது.

மெய்யுணர்வாளர்கள் விஞ்ஞானிகளின் விளக்கத்தை முடிவான ஒன்றாக ஏற்பதில்லை. விஞ்ஞானிகளுடைய விளக்கத்திற்கும் அடிப்படையான விளக்கத்தை மெய்ஞ்ஞானிகள் தருகின்றார்கள். அதை நமக்கு அவர்களுடைய அனுபவத்தில் கிடைத்த விளக்கமாக தருகின்றார்கள். அருளாளர்கள் நாம் பேசும் மொழியை, சொற்களை மனிதனின் மூளைப் பகுதியிலே உருப்பெற்று அங்கேயே மறைந்து விடும் பொருட்களாக கருதுவதில்லை. மனிதனின் உணர்வுகளுக்கெல்லாம் ஆதாரமாக ஒரு சக்தி உண்டென்றும், அந்தச் சக்தி இறைவனுடைய அம்சமென்றுப், அந்தச் சக்தி உடலில் பல நிலைகளில் ஆதார சக்தியாக நின்று, தேவைக்கேற்ப பரிணாமம் பெற்று சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை ஆகிய ஆதாரங்களிலே பொருந்தி நின்று எழுத்தாகவும் ஒலியாகவும், ஓசையாகவும் பரிணமிக்கின்றது என்ற உண்மையை அருளாளர்கள் அனுபவபூர்வமாக நமக்குத் தெரிவிக்கின்றார்கள்.

''பரம்பொருளின் விளக்கங்கள் எத்துணையோ அத்துணைச் சொற்கள் உள்ளன' என்கிறது ரிக்வேதம்.

''வாக்கு பிரம்மமாகும்' என்கிறது பிரக தாரண்யத உபநிடதம்.

''ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே''எனத் திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தார். ''பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும் அண்ட முதலான் அறஞ்சொன்ன வாறே''.

(திருமந்திரம்....59)

''தானே அகார உகாரம தாய்நிற்குந்''

(திருமந்திரம்...901)

அருளாளர்களின் அனுபவப்படி மொழியின் தோற்றமும் பிரபஞ்சத்தின் தோற்றமும் இணைந்தே காணப்படுகின்றன. பரம்பொருளே இவற்றின் தோற்றத்திற்கு மூல காரணமாகும். இறைவன் உயிர்கள்பால் அன்பு மேலிட்டு ஐந் தொழில்களை நடத்துவதற்காக பிரபஞ்சத்தையும், மொழியையும் அருளிச் செய்கின்றான். உயிர்கள் அறிவு விளக்கம் பெற்று இறைவன் திருவடி சேர வேண்டும். அதுவே பிறப்பின் நோக்கமாகும். அதற்குத் தேவை மலநீக்கம். மலநீக்கத்திற்காக தனு, கரண புவன போகங்கள் இறைவனால் தந்தருளப்பட்டுள்ளன. அவற்றை உயிர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அனுபவம் பெற வேண்டும். இன்ப துன்பங்களை அடைய வேண்டும். அதற்கு வழி செய்யும் வகையில் இறைவன் மொழியையும் அருளிச் செய்கின்றான். மொழிக்கு ஒலியுண்டு, பொருளுண்டு. சொற்பிரபஞ்சம் என்றும், பொருட்பிரபஞ்சம் என்றும் கூறுவார்கள். ஒலியின் மூலமானது நாதம் எனப்படும். நாதம் என்பது எழுத்தோசைக்கு முதன்மையாக நிற்பது. இறைவியின் அம்சமாக விளங்குகிறது. சிவம் தோன்றுவதற்கு முதல்நிலைக்களமாகிய ஓசையேநாதம் எனக் கூறப்படும். நாதமும் விந்துவும் முறையே பேரறிவும், பேராற்றலும் வெளிப்படுவதற்கான தத்துவங்களாகும். சக்தியின் ஆர்வத்தால் தோன்றுவது நாதம். இதனை 'சோதியதனில் பரந்தோன்றத் தோன்றுமாம் தீதில் பரை; அதன் பால்திகழ் நாதமே' என்று திருமந்திர வரிகள் உணர்த்துகின்றன.

உயிரை பந்திக்கும் மூல மலம் ஆணவ மலமாகும். ஆணவத்தின் வன்மை தணிந்து அறிவின் விளக்கம் உள்ளத்தில் எழ வேண்டும். இதற்கு உதவுவது மொழி. கலைகளும்கூட நின்று உதவுகின்றன. அருளாளர்கள் மொழியையும் வாக்குகளையும் தூய உலகு என்பர். பரம்பொருள் பேரறிவும் பேராற்றலும் கொண்டதாகும். உயிரோ சிற்றறிவும் சிறு ஆற்றலும் கொண்டது. மலத்தில் அழுந்திக் கிடப்பது. மலம் அகல உயிர் கருவி கரணங்களோடு செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட வாக்கும் தேவையாகும். பரம்பொருள் அசையாது. அறிவுப் பிழம்பாகி நிற்கும் அமைதி நிலை சலனமற்றது. பிரபஞ்ச தோற்றம் தொடங்கும்பொழுது மொழியின் இயக்கமும் தொடங்குகிறது. வாக்குகள் பிறக்கின்றன. ஓம் எனும் மூல மந்திரம் ஒலிக்கத் தொடங்குகின்றது. மற்ற பீஜ மந்திரங்கள் எழும்புகின்றன. ஐம்பத்தோரு எழுத்துக்களும் வடிவம் கொள்கின்றன. திருவருளின் ஆற்றலே இவ்வெழுத்துக்களை இயக்குகின்றது. ஐம்பத்தோரு எழுத்துக்களும் சக்தியின் வடிவாகக் கொள்ள வேண்டுமென்பார் திருமூலர். வேதங்களும், ஆகமங்களும் இந்த ஐம்பத்தோரு எழுத்துக்களால் ஆகியவை. ஐம்பத்தோரு அக்கரங்கள் மாறி மாறி பதங்களாகின்றன. அவை மாறி மாறி வாக்கியங்களாகின்றன. இறைவன் வேத ஆகமங்களை அவ்வாறே அருளிச் செய்வார். வேத ஆகம வாக்கியங்கள் அல்லது திருமுறைத் திருமொழி நாம் காதினால் கேட்கின்ற ஓசை மட்டும் ஆகாது. அந்த ஓசையின் வழியே எழுந்து நம்முள் ஒரு தெய்வீக உணர்வை உண்டாக்குகின்ற ஆற்றலும் ஆகும். இந்த ஆற்றல் எழுத்துக்கள் மறைந்தாலும், ஓசை நின்றாலும் தொடர்ந்து நமது உள்ளத்திலும், உடலிலும் சில சலனங்களை எழுப்புகின்றன. இந்தச் சலனங்கள் உயிரினை பரம்பொருளுடன் இணைத்து போகச் செய்யும் ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. இந்த ஆற்றல்தான் அருளாளர்களுடைய திருவாக்கிற்கு அடிப்படையாகும்.

விஞ்ஞான ரீதியாக நாம் கண்களால் பொருட்களைப் பார்க்கிறோம். காதுகளால ஓசையைக் கேட்கின்றோம். இது பரு உடம்பிலுள்ள கருவி கரணங்களின் இயக்கத்தால் நடைபெறுகிறது. விஞ்ஞானம் இதனை தூல நிலையிலேயே கண்டு ஆராய்ச்சி செய்கிறது.

ஆனால், எந்தவொரு பொருளுக்கும்நுட்ப நிலை உண்டு. அந்தப் பொருளின் உண்மையை குறிப்பது அந்த நுட்ப நிலை. எழுத்துக்களுக்கும் நுட்ப நிலை உண்டு. நமது காதுகளால் கேட்க முடியாத ஓர் உணர்வினை எழுத்துக்களின் நுட்ப நிலையில் நாம் தெரிந்து கொள்ளலாம். அவ்வாறு தெரிந்து கொள்வதற்கு இறையருளுடன் கூடிய அப்பியாசம் தேவை. ஆழமாகப் பார்க்கும்பொழுது பரு நிலையை விட நுட்ப நிலையே வாக்கினுடைய வலிமையைக் காட்டுகிறது.

விஞ்ஞானிகள் ஒரு பொருளினுடைய பருத் தன்மையிலிருந்து அதனுடைய நுட்பத் தன்மைக்குச் செல்கின்றார்கள். மெய்ஞ்ஞானிகள் நுட்பத்திலிருந்து பருத் தன்மைக்குப் போகிறார்கள். அணுவைப் பிளந்தால் அபாரமான சக்தி வெளிப்படுவது போல, நுட்பத்தை உணர்ந்தால் இறைத் தன்மை பெறலாம் என்பது அருளாளர்களுடைய அனுபவமாகும். மொழியைப் பொறுத்தவரையிலும் இதேநிலை தான். நமது உயிரின் மையமாகிய இறைநிலை எழுத்து வடிவமாகவும், ஒலி வடிவமாகவும் பொதிந்து கிடக்கின்றது. நம்முடைய அறிவுக்கும் எட்டாத நிலையில் இருக்கின்றது. பின்னர் சூக்கும நிலையிலிருந்து தூல நிலைக்கு வருகிறது. இவ்வாறு வாக்கு தன்மை மாறி வருவது உயிரினுடைய தூல அறிவை விளக்கம் பெற உதவுவதற்கேயாகும். ஆகவே, வாக்குஎன்பது இறை அம்சமாயினும், பகுத்துணர்வு நிலை பெற பயன்படுகிறது. இத்தகைய வாக்கு

இல்லையெனில் உயிர்ஞானம் பெற மாட்டாது. இப்படிப்பட்ட வாக்கு தோன்றுவதற்கு முத லோசையாக நாதம் உள்ளடக்கிக் கொண்டிருக் கும். மிக சூக்குமமான நிலையில் இது மேலும் இறைவனால் தூண்டப்படுகின்றது.

இந்த நாதத்தை சுத்த மாயையின் நுட்ப நிலை என்று அருளாளர்கள் கருதுகின்றனர். ஆக, சிவசக்தியின் அம்சமாகிய நாதத்தால் வாக்கும் வாக்கினால் உணர்வும் உணர்வி வினால் பல்வேறு மனோநிலைகளும், அந்த மனோநிலைகளினால் பலதரப்பட்ட அறிவும் நமக்கு விளங்கத் தொடங்குகின்றன. ஆகவே, அறிவின் உற்பத்திக்கு நாதமே காரணம் என்பது அருளாளர்களுடைய அனுபவம். நாதம் சூக்கும வாக்காக பரிணமிக்கின்றது. சூக்கும வாக்கிலிருந்து பைசந்தி வாக்கு வந்த டைகின்றது. சூக்குமத்தில் உள்ள வாக்கு ஓரளவு தூலமடைகின்றது. மயிலின் முட்டைக் குள் முழுமையான மயிலுக்கு இருக்க வேண்டிய எல்லா நிறங்களுக்குமான கரு அமைந்திருக் கின்றது. அந்த முட்டை பக்குவப்படும்பொழுது இந்த நிறங்கள் யாவும் பிரகாசம்பெறுகின்றன. பைசந்தி வாக்கு சித்தத்தில் உணர்வாய்நிற்கும் என்கிறது சிவப்பிரகாசம்.

'வந்தடைந்து பின்னமாய் வன்னங்கள்
தோற்றம்
வரும் அடைவு படஒடுக்கி மயிலண்ட
சலம்நேர்'

என்கிறது சிவப்பிரகாசம்.

சூக்கும நிலைக்கு அடுத்து பைசந்தி நிலை, அதைத் தொடர்ந்து வாக்கு மத்திமைநிலைக்கு வருகிறது. பேசுபவருடைய உள்ளத்திலே எழும்பும் நுண்ணிய உணர்வுகளுக்கு இந்த வாக்கு ஒரு வாகனமாகின்றது. செவியில் கேட்கப்படாதது. கழுத்திலே எழும்புவது, ஞானிகளால் உள்ளத்திலே உணரப்படும் ஓசை யாக உள்ளது. சூக்குமமான நிலையில் அக் கரங்களுடைய வடிவு பிரிந்து தோன்றி விளங்கு தலுக்கு இடமாவது,

'உள்உணர் ஓசைஆகி, செவியினில் உறுதல்
செய்யாது
ஒள்ளிய பிராண வாயு விருத்தியை உடையது
அன்றி
தெள்ளிய அக்கரங்கள் சிந்திடும் செயலது
இன்றி-
மெள்ளவே எழுவது, ஆகும் மத்திமை,
வேறதாயே''

(சிவஞான சித்தியார்..41)

வாக்குகளில் நான்காவது வைகரியாகும். தனது செவிக்கு மட்டும் கேட்கப்படுவது சூக்கும வைகரியாகும். தன் செவிக்கும், பிறர் செவிக்கும் கேட்கப்படுவது தூல வைகரியாகும். இது மனதில் எழும்பும் சொல்லுக்கு ஒலிவடிவம் கொடுப்பதாகும். பேசுபவனுக்கும் கேட்பவ னுக்கும் இடையே பகுத்தறிவிற்கான உணர் வினை தோற்றுவிப்பதாகும். கழுத்திலிருந்து எழும்பி வாயில் நின்று வெளிவருவது, வைகரி நிலையில் அகங்காரமும் புத்தியும் சேர்ந்து செயல்படுகின்றன.

'வைகரி செவியில் கேட்ப தாய், அத்த
வசனம் ஆகி,
மெய்தரும்''

என்கிறது சிவஞான சித்தியார்.

வாக்கிற்கு மூலம் பிரணவம். 'எம்பிரான் ஓர் எழுத்தே' 'ஓரெழுத்தாலே உலகெங்கும் தானாகி' என்பது திருமந்திரம். பிரணவமே


**நிதி வசதியில்லாத திருக்கோயில்களின் ஒரு கால பூஜைக்காக**

## நிரந்தர வைப்புநிதி ஏற்படுத்தும் திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள நிதி வசதி இல்லாத திருக்கோயில்களில் ஒருகால பூஜைக்கு நிரந்தர ஏற்பாடு செய்வதற்காக மாண்புமிகு முதல மைச்சர் அவர்களால் கீழ்கண்ட திட்டம் அறி விக்கப்பட்டது.

நிதி வசதி இல்லாத திருக்கோயில்களில் ஒருகால பூஜையாவது நடைபெற நிரந்தர ஏற் பாடாக பொதுமக்கள் ரூ. 25,000 நன்கொடை யாக வசூலித்து ஒரு முதலீடு ஏற்படுத்தினால் அந்த நிரந்தர முதலீட்டின் வட்டியை கொண்டு ஒருகால பூஜை நடைபெறும். அவ்வாறு ரூ. 25000 நன்கொடையாக முழுமையாக வசூ லிக்க இயலாவிடில் ரூ. 12,500/- நன்கொடை யாக வசூலித்தால், தமிழக மாண்புமிகு முதல் வர் திருக்கோயில் திருப்பணி மற்றும் பரா மரிப்பு நிதியிலிருந்து திருக்கோயில் ஒன்றுக்கு ரூ. 12,500 வீதம் 400 திருக்கோயில்களுக்கு நன்கொடையாக வழங்கி ஒவ்வொரு திருக் கோயிலுக்கும் நிரந்தர வைப்பு நிதியாக ரூ. 25000 முதலீடு செய்து அதன் வட்டி மூலம் நிரந்தரமாக ஒருகால பூஜை நடைபெற ஏற் பாடு செய்யப்படும். எனவே அந்தந்த பகுதி யில் உள்ள பகதர்கள் இந்த திட்டத்தின் கீழ் தங்கள் பகுதியில் உள்ள திருக்கோயில்களில் ஒருகால பூஜையாவது நடைபெற ஏற்பாடு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இதில் விருப்பம் உடையவர்கள் ஒவ் வொரு மாவட்டத்திலும் உள்ள இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, உதவி ஆணையர் களைஅணுகக்கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இப்படிக்கு,
உறுப்பினர்/செயலாளர்,
தமிழ்நாடு திருக்கோயில்கள்
நிர்வாக வாரியம், சென்னை—34.

திருவைந் தெழுத்தாகும். மொழியினுடைய ஐம்பது எழுத்துக்களும் திருவைந்தெழுத்தில் அடங்கும். வேதங்களும் ஆகமங்களும் ஐம்பது எழுத்துக்களில் அடங்கும். பிரபஞ்சத்திற்கு காரணமான பரம்பொருள் மிக நுட்பமான நிலையில், பிரணவத்திலும் ஐந்தெழுத்திலும் உள்ளத்திலே சதா ஒலித்துக் கொண்டிருக்கும்,

''ஐம்ப தெழுத்தே அனைத்துவே தங்களும்
ஐம்ப தெழுத்தே அனைத்தாக மங்களும்
ஐம்ப தெழுத்தின் அடைவை யறிந்தபின்
ஐம்ப தெழுத்தே அஞ்செழுத் தாமே''

(திருமந்திரம்..2698)

ஒரு பொருளுக்கு உருவம் உண்டு என்கிற போது அதற்கான நுட்ப நிலை அருவமாய் இருப்பதில் வியப்பு ஒன்றுமில்லை. இந்தப் பிர பஞ்சம் முழுவதிலும் அணுக்கள் நிரம்பியுள்ளன என்பது விஞ்ஞானம். அதை நாம் ஏற்றுக் கொள்கின்றோம். ஆனாலும், அணுக்களை நாம் கண்களால் காண முடிவதில்லை. அதே போல, நாம் பேசும் தூல வாக்கிற்கு சூக்கும நிலை உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அத்தகைய உணர்வும் சூக்கும நிலை வாக்கும் இணைந்தே நிற்கின்றன. எல்லா விதமான சூக்கும வாக்குகளுக்கும் மூலமாகிய பொருள் ஓங்காரமாகும். ஓங்காரத்தில் எல் லாம் அடங்கி நிற்பது. இதை உணரும் வகை யில் பயிற்சி பெற வேண்டும். ஓங்காரத்தில் பலவகையான எழுத்துக்களும், நூல்களும் அடங்கியுள்ளன. அதன் இயல்பு அறிந்து பயிற்சி பெறுவோர்க்கு நல்ல பேறுகளும், வீட்டுப் பேறும் கிடைக்கும் என்பார் திருமூலர்.

''ஓமெனும் ஓங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனும் ஓங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே''

(திருமந்திரம்......2676)

அருளாளர்களுடைய திருவாக்கு, அருள் வாக்கு, உள்ளத்தின் மையத்திலிருந்து இறை யுணர்வின் தொடக்கமாகிய நாத அனுபவத்தி லிருந்து வெளிக்கிளம்புகின்றது. மொழி மொழி யாக மட்டும் பயன்படுத்தப்படவில்லை. அந்த மொழியில் இறை சக்தி, ஆன்மிக ஆற்றல் இணைந்து நிற்கின்றது. அந்த மொழியினு டைய ஒலி கேட்போருடைய உள்ளத்தை நேரடியாக தாக்கவல்லது. சிற்றறிவுக்கு அப் பாற்பட்ட ஒரு உணர்வு நிலையிலிருந்து அது பேரருவி போல வெளிக்கிளம்பி கேட்போர் மனதையெல்லாம் புனிதப்படுத்துவது. அதே நேரத்தில் அருளாளர்களுடைய திருவாக்கு எளிமையும் தெளிவும் மிக்கது. அறிவு நிலையைத் தாண்டி உணர்வு நிலையில்இயங்கு வதால் அவர்களுடைய திருவாக்கு சொற்கள் தாங்கி நிற்கின்ற கருத்துக்களுக்கு அப்பால் ஆழம் கொண்டதாக அமைகின்றது. எளிமை, தெளிவு, தூய்மை, ஆழம் இத்துணை இயல்பு கொண்டது அருளாளர்களுடைய திருவாக்கு.

அறிவுரீதியில் அவர்களுடைய அருள் வாக்கை ஆய்வு செய்தால் அவற்றிலே பொதிந்து கிடக்கும் உண்மைகள் புலப்படாது. பகுத்தறிவினை தள்ளி வைத்துவிட்டு அந்தத் திருவாக்குகளுக்கு நம்மையே அர்ப்பணம் செய்து கொண்டால் அவற்றின் உண்மைக் கருத்துக்கள் நம்முடைய உள்ளத்திலே உதய மாகும். இந்தக் கருத்துக்கள் நம்முடைய உள் ளத்திலே படியப் படிய அறியாமையாகியஇருள் நீங்கி ஓர் புத்தொளி தோன்றும். இந்த புத் தொளியில் மூழ்கி நிற்கும் உயிரானது தன்னை மறந்து உணர்வு நிலையில், சலனமின்றி அருள் வாக்கின் நுண்ணிய நிலையில் அமைதியடை யும், 'பெற்றார் உலகில் பேசாப் பெருமையே' என்கிறது திருமந்திரம்.

பரம்பொருளின் இயல்பான நிலை மௌனம் என்று அருளாளர்கள் கூறுகின்றனர். தற்போதம் இழந்து இறையுணர்வோடு கலந்து நிற்கும் நிலையை மோன சமாதி என்று அரு ளாளர்கள் குறிப்பிடுகின்றனர். மோன சமாதி பரம்பொருளின் இயல்பான நிலை என்றால், வாக்கு பரம்பொருளின் தோற்ற நிலையாகும். தோற்றம், உற்பத்தி, வளர்ச்சி, ஒடுக்கம், இவையெல்லாம் வாக்கின் பல்வேறு இயக்க நிலைகளாகும்.

மொழியின் உண்மை நிலையை நன்கு உணர்ந்தவர்கள் அருளாளர்கள். மொழியிலே இறைவனைக் காண்பதால் அவர்களுடைய அருள்வாக்கு இறை உணர்வை பிரதிபலிக்கின் றது.

சேக்கிழார் பெருமான் ஆனாய நாயனார் புராணத்தில் நாயனார் குழலூதி சிவபெரு மானது திருவைந்தெழுத்தை இசைப்படுத்தி வாசிக்கும்பொழுது அகில சராசரங்கள் மட்டு மல்ல, இறைவனாரே கேட்டு இன்புற்றதாக கூறுகின்றார். ஆனாய நாயனார் ஓர் மெய்யன் பர். அவருடைய குழலில் எழும்பிய இசை அன்புநிறைந்த மனத்தால் விளைந்தது. அது திருவைந்தெழுத்தை மையமாகக் கொண்டது. திருவைந்தெழுத்திற்கு மலம் நீக்கும் வலிமை யுண்டு. அதனுடைய இசை உயிர்களின் உண்மையான இன்பத்தைப் பெருக்கும். அத் தகைய இன்பம் உயிர் வகைகள் எல்லாவற்றை யும் தொட்டது. அது மட்டுமல்ல உலகத்தை யும் நிறைவித்து, வானுலகத்தையும் தன் வசம் கொண்டது. இறைவனுடைய திருச்செவியின் பக்கத்தில் அணையும்படி பெருகிற்று இது ஓர் அருளாளருடைய பெருமைமிக்க இசை நிலை யாகும்.

''மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தவிசைக்
குழலோசை
வையந்தன் னையுநிறைத்து வானுந்தன்
வயமாக்கிப்
பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவி
னடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியி னருகணையப் பெருகி
யதால்''

(திருத்தொண்டர் புராணம்-
ஆனாய நாயனார்
புராணம் 962)

(தொடரும்)

சிவபெருமானின்

# அரிய திருக்கோயில்கள் அறுபது

கோயிற்கலைச் செல்வர் தி. இராசமாணிக்கம்

இந்து மதத்தில் சைவம், வைணவம், சாக்தம், கணபத்யம், கௌமாரம், மற்றும் சௌரம் என ஆறு சமயங்கள் பேசப்படினும், சைவம் மற்றும் வைணவம் எனும் இரண்டுந் தான் அதன் இருகண்கள் என்றால், அது சற்றும் மிகையாகாது. சைவத்தில் மூலமும் நடுவும் ஈறும் அற்ற முழுமுதற் பொருளாகப் போற்றி வணங்கப் படுபவன் சிவபெருமான். அவனிடத்தில் ஞானசக்தி மற்றும் கிரியாசக்தி என இரண்டும் ஒருங்கிணைந்து, கிரியாசக்தி வலுப்பெறும்போது அவன் எடுக்கும்வடிவங்கள் மகேச வடிவங்கள் எனப் பெறும். அது 25 என்பர் ஆன்றோர். எனினும் ஆங்காங்கு உள்ள திருக்கோயில்களில் ஆகம விதிகளுக்கு இயைய அமையப்பெற்ற எழிலார்ந்த வடிவங்கள் மற்றும் ஆகமவிதிகளுக்கு வேறுபட்ட அரிய திருவுருவங்கள் பரவலாகக் காட்சி அளிக்கின்றன. எனது தலயாத்திரைகளின்போது நான் காணும்பேறு பெற்ற வடிவங்களை மாவட்ட வாரியாகத் தொகுத்துக் கீழே கொடுத்துள்ளேன். இவை போன்ற திருவுருவங்கள் இன்னமும் பல இருக்கலாம்.

### செங்கல்பட்டு எம்.ஜி.ஆர் மாவட்டம்

1. திருவொற்றியூர் — கோயிலுக்கு வெளியில் ஏறத்தாழ 6 அடி உயரமும், வலக்கை அபயமுத்திரையிலும் உள்ள தட்சணாமூர்த்தி.

2. திருவொற்றியூர் ஆதிபுரீசுவரர் கோயிலில் உள்ள ஏகபாதமூர்த்தி.

3. காஞ்சிபுரம் ஜுரஹரேசுவரர் கோயில் கோபுரத்தில் உள்ள 25 தலைகள், 30 கைகள் கொண்ட மகாசதாசிவ மூர்த்தி.

4. காஞ்சிபுரம் கைலாயநாதர் கோயில்-கையில் கங்கையை ஏந்தியுள்ளகங்காதரமூர்த்தி

### தென்னார்க்காடு மாவட்டம்

5. மேலக்கடம்பூர்—காளை மீது நடனம் புரியும் நிருத்தமூர்த்தி.

6. மேலக்கடம்பூர் — காளையுடன்கூடிய தட்சணாமூர்த்தி.

7. மேலக்கடம்பூர்— கங்காதரமூர்த்தியின் வீற்றிருந்த திருக்கோலம்.

8. திருநாவலூர்— தட்சணாமூர்த்தியின் நின்ற திருக்கோலம்.

9. சேந்தமங்கலம்— காளையுடன் கூடிய தட்சணாமூர்த்தி.

10. சேந்தமங்கலம் :—10 கைகள் கொண்ட பைரவமூர்த்தி.

11. திருஅதிகை—4 முகங்கள் கொண்ட முகலிங்கம்.

12. திருஅதிகை—தேருடன் 12 கைகள் உடைய திரிபுராந்தகமூர்த்தி.

13. திருஅதிகை— புட்பக விமானத்தில் இராவணன், மற்றும் பூதகணங்களுடன் இராவணானுக்கிரகமூர்த்தி.

14. திருவக்கரை—3 முகங்களுடன் மூலவராகக் காட்சி அளிக்கும் முகலிங்கம்.

15. திருக்கோவிலூர் — கலை அழகு மிக்க அந்தகாசுரவத மூர்த்தியின் உலோகப் படிமம்.

### திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம்

16. விருஷபாரூடமூர்த்தியுடன் அமையப் பெற்ற இலிங்கோற்பவ மூர்த்தி.

### சேலம் மாவட்டம்

17. தாரமங்கலம் :— கையில் கங்கையுடன் கூடிய கங்காதரமூர்த்தி.

18. கொக்கராயன் பேட்டை — 8 கைகள் கொண்ட தன் ஊர்தியான நாய் இன்றி முகத்தில் அமைதி தவழும் பைரவமூர்த்தி.

### கோவை மாவட்டம்

19. கடத்தூர்—பளிங்குக் கல்லாலான தட்சணாமூர்த்தி

20. பெரிய ஆவுடையார் கோயில்— கைகளில் எந்தப் பொருளும் இன்றி, கலை அழகுமிளிர, உருவாக்கப் பெற்ற தட்சணா மூர்த்தி.

**திருச்சி மாவட்டம்**

21. திருச்சி குடைவரை — அன்னை யின்றி கங்காதர மூர்த்தியின் பழமையான வடிவம்.

22. கங்கை கொண்ட சோழீச்சரம்— உலகப் புகழ் பெற்ற சிற்பக் கலையின் உன்னத திறனுக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டான சண்டிகேசுவர அனுக்கிரகமூர்த்தி.

23. திருமழபாடி — கையில் மழுவுடன் நடனமாடும் நடராஜர் வடிவம்.

24. திருமழபாடி — இடப்பக்கத்திற்குப் பதில் வலப்பக்கத்தில் மார்பகம் அமையப் பெற்ற அர்த்தநாரீசுவர மூர்த்தி.

25. திருமழபாடி — சிலைவடிவமாக உள்ள சோமாஸ்கந்த மூர்த்தி. பொதுவில் இது உலோகப் படிவமாகத்தான் கோயில்களில் காணப்பெறும்.

26. திருப்பைந்நீலி குடைவரை — அன்னை வலப்பக்கமாக உள்ள சோமாஸ்கந்த மூர்த்தி.

27. திருவானைக்கா – ஏகபாதமூர்த்தி.

**புதுக்கோட்டை மாவட்டம்**

28. திருக்கோகர்ணம் குடை வரை— அன்னையின்றி கங்காதரமூர்த்தியின் பழமை யான வடிவம்.

29. திருக்கோகர்ணம் கோயில் (சிவ— வடிவமாக உள்ள விருஷபாரூடமூர்த்தி (பொதுவில் இது கோயில்களில் உலோகப் படிவமாகத்தான் காணப்பெறும்).

30. மூவர் கோயில் — வீணாதர தட்சணாமூர்த்தி.

31. திருமெய்யம் குடை வரை— சிவ பெருமான் இடுப்பு வரைக்கும் உருவாக்கப் பெற்று அதற்குக்கீழ் தூணின் அமைப்பினைக் கொண்ட இலிங்கோற்பவ மூர்த்தியின் பழமை யான வடிவம்.

**தஞ்சை மாவட்டம்**

32. திருக்கடவூர் காலாந்தகமூர்த்தியின் எழில்மிக்க செப்புச்சிலை.

33. திருக்குறுக்கை— காமதகன மூர்த்தி யின் கலை அழகுமிக்க உலோகப்படிமம்



34. திருவிற்குடி — சலந்தராசுரவத மூர்த்தியின் கலைநுட்பத்துடன் உருவாக்கப் பெற்ற செப்புச் சிலை.

35. திருமயிலாடுதுறை வள்ளலார் கோயில்—காளையுடன் கூடியதட்சணாமூர்த்தி

36. மேலப்பெரும்பள்ளம்—வீணையை ஏற்கும் நிலையில் கலைத்திண்மையுடன் வடிக் கப் பெற்ற பிச்சாடனமூர்த்தியின் உலோகப் படிமம்.

37. தாராசுரம் — சரபேசமூர்த்தியின் அரிய வடிவம்.

38 தாராசுரம் — பூதகணங்கள் முனிவர் களின் மனைவியர்கள் ஆகியோருடன் கூடிய பிச்சாடன மூர்த்தி (தற்போது தஞ்சை அருங் காட்சியகத்தில் உள்ளது).

39. திருக்கண்டியூர்—வீற்றிருந்த திருக் கோலத்தில் உள்ள அர்த்தநாரீசுவரமூர்த்தி.

40. தஞ்சைப் பெரிய கோயில் -ஓவிய மாகத் தீட்டப் பெற்ற திரிபுராந்தகமூர்த்தி.

41. தஞ்சைப் பெரியகோயில் — சிவ பெருமானின் வாமதேவ வடிவம்.



## இறைவனே இறுதி துணை

என்பெற்ற தாயரும் என்னைப்
பிணம்என்று இகழ்ந்துவிட்டார்
பொன்பெற்ற மாதரும் போவென்று
சொல்லிப் புலம்பிவிட்டார்
கொன்பெற்ற மைந்தரும் பின்வலம்
வந்து குடமுடைத்தார்
உன்பற்று ஒழிய ஒருபற்றும்
இல்லை உடையவனே

—பட்டினத்தடிகள்

42. தஞ்சைப் பெரிய கோயில்— சிவ பெருமானின் அகோர வடிவம்.

43. வைத்தீசுவரன் கோயில் — 25 தலைகள் 50 கைகள் கொண்ட மகா சதாசிவ மூர்த்தி.

44. திருவழுவூர் — கைபுனைந்து இயற்றிய கலை அழகு கொஞ்சும் கஜால மூர்த்தியின் செப்பு சிலை.

45. சீர்காழி — பின் இரு கைகளில் மான் மழு அமைக்கப் பெறாத சிவபெருமானது திருவுருவம்.

46. திருப்பறியலூர் — கலைவண்ணங் கொண்ட வீரபத்திரரின் உலோகப் படிமம்.

47. திரிபுவனம் — சரபேச மூர்த்தியின் அரிய வடிவம்.

48. கருந்தட்டாங்குடி —வலப்பாகத்தில் மார்பகம் அமையப் பெற்ற அர்த்தநாரீசுவர மூர்த்தி.

49. கருந்தட்டாங்குடி —கங்காள தண்டத்தில் விசுவக்சேனர் உருவம் அமையப்பெற்ற கங்காளமூர்த்தி.

50. திருவெண்காடு — சிவபெருமானது அகோர வடிவம்.

51. தஞ்சை அருங்காட்சியகம்— பின் வலக்கையில் மழுவிற்குப் பதில்பானும், பின் இடக்கையில் மானுக்குப் பதில் மழுவும் ஏந்தியுள்ள திருவருவம்.

### காமராஜர் மாவட்டம்

52. செவல்பட்டி குடைவரை — கைகளில் தீப்பிழம்பு ஆகிய இல்லா நடராஜரின் பழமையான வடிவம்.

53. குன்றக்குடி குடைவரை— சிவபெருமான் இடுப்பு வரை உருவாக்கப் பெற்று அதற்குக் கீழே தூணின் அமைப்பினை உடைய இலிங்கோற்பவ மூர்த்தியின் பழமையான வடிவம்.

54. பிள்ளையார்பட்டி குடைவரை — சிவபெருமான் இடுப்பு வரை உருவாக்கப் பெற்று அதற்குக் கீழ் தூணின் அமைப்பினை உடைய இலிங்கோற்பவ மூர்த்தியின் பழமையான வடிவம்.

55. குன்றக்குடி குடைவரை— 8 கைகள் கொண்ட நடராஜர் திருவுருவம்.

### சிதம்பரனார் மாவட்டம்

56. கழுகுமலை— மிருதங்க தட்சணா மூர்த்தி.

### திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம்

57. திருமலாபுரம் குடைவரை— கைகளில் தீப்பிழம்பு ஆகிய அமையப் பெறாத நடராஜரின் பழமையான வடிவம்.

58. பிரமதேசம்— பூதகணங்கள், முனிவர்களின் துணைவியார்கள், வானவர்கள் ஆகியோர் புடை சூழ இருக்கும் பிச்சாடன மூர்த்தி

### ஆந்திர மாநிலம்

59. சுருட்டப்பள்ளி — சிவபெருமானின் பள்ளிகொண்ட திருக்கோலம்.

60. சுருட்டப்பள்ளி — காளை மற்றும் அன்னையுடன் கூடிய தட்சணாமூர்த்தி.

# திருச்சீயாத்தமங்கை

புலவர் பொன் திருக்கண்ணபுர சுப்பிரமணியன், எம்.ஏ., பி.லிட்.,

திருநீலநக்க நாயனார் அவதரித்த திருப்பதியாகிய இத்தலம் திருநள்ளாற்றுக்குத் தென் மேற்கே 12 கி.மீ. தொலைவில உள்ளது. புராணங்களில்-கல்வெட்டுக்களில் திருச்சாத்தமங்கை என்றே அழைக்கப்படுகிறது. தற்பொழுது திருச்சீயாத்தமங்கை என்று வழங்கப்படுகிறது. ஊரின் பெயர் சாத்தமங்கை. இத்திருக்கோயிலின் திருப்பெயர் அயவந்தி.பிரமன் இத்தலத் திறைவனை வழிபட்டதால் அயவந்தி என்று வழங்கப்பட்டது என்பர் சான்றோர். நாகை காயிதேமில்லத் மாவட்டம்-நன்னிலம் புகைவண்டி நிலையத்திலிருந்து செல்லலாம். திருமருகல் பக்கத்தில் உள்ளது. காவிரிக்குத் தென்கரையிலுள்ள தலங்களில் பதினெட்டாவது ஆகும். இறைவனின் திருப்பெயர் அருள்மிகு அயவந்திநாதர். இறைவியின் திருப்பெயர் அருள்மிகு மலர்க்கண்ணம்மை அறுபத்திமூன்று நாயன்மார்களுள் ஒருவரான திருநீலநக்க நாயனார் அவதரித்த திருப்பதியானதால் 'நிறையினார் நீலநக்கன் நெடுமாநகரென்று தொண்டர் அறையும் ஊர் சாத்தமங்கை அயவந்தி' என்னும் தேவாரப் பகுதியாலும், சேக்கிழார் பெரிய புராணத்தாலும் இதை அறியலாம்.

திருநீலநக்கநாயனார் தம் மனைவியாருடன் இறைவனை வழிபடத் திருக்கோயிலுக்குச் சென்றார். அப்பொழுது சிலந்திப் பூச்சி சிவலிங்கத்தின்மீது விழுந்தது. நக்கனார் மனைவியார் அன்பு மேலீட்டினால் அப்பூச்சியை வாயால் ஊதி அகற்றினார். இதைக் கண்ணுற்ற நாயனார் தமது மனைவியாரின் இச்செயல் தகாதது என்று எண்ணி அவரைத் துறந்தனர். மனைவியாரும் வீடு செல்லாது திருக்கோயிலில் இருந்தார். அன்று இரவு நாயனார் உறக்கத்தில் சிவபெருமான் அவருடைய கனவில் தோன்றி அவர் மனைவியார் ஊதின இடந்தவிர ஏனைய இடமெல்லாம் சிலந்தியின் கொப்புள்(கொப்புளம்) இருப்பதைக் காட்டி அவ்வம்மையாருடைய அன்பின் பெருக்கை வெளிப்படுத்தி அவரை நாயனாரோடு கூட்டுவித்த பெருமை வாய்ந்த தலம். திருஞானசம்பந்தப் பெருந்தகையார் இப்பதிக்கு எழுந்தருளியபோது திருநீலநக்கர் அவரை வரவேற்று அவருடைய நட்பைப் பெற்றதும் இப்பதியில் தான். திருஞான சம்பந்தப் பெருந்தகையாரும் ''அடிகள் நக்கன்பரவ அயவந்தி அமர்ந்தவனே' எனத் திருநீலநக்கநாயனாரைப் பாராட்டியிருப்பது போற்றித் துதிக்கக் கூடியது. இத்தலத்து இறைவனை திருஞானசம்பந்தர் சுவாமிகள் திருநள்ளாற்று மருந்தீசரை வணங்கி வழிபட்டு திருசாத்தமங்கை மூதூரில் எழுந்தருளி

''திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும்மதி
சென்னி வைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது
மேற்பதொன்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ் சும்பெருஞ்
சாத்தமங்கை
அருமல ராதிமூர்த்தி யய வந்தி யமர்ந்தவனே''
என்று தொடங்கி

''மறையினார் மல்குகாழித் தமிழ்ஞானசம்
பந்தன்மன்னும்
நிறையினார் நீலநக்க னெடு மாநக ரென்று
தொண்டர்
அறையுமூர் சாத்தமங்கை யய வந்திமே
லாய்ந்த பத்தும்
முறைமையா யேத்த வல்லா ரிமை யோரிலு
முந்துவரே''

என்று மனம், மொழி, மெய்களால் பாடித் துதித்து ஒரு பதிகம் பாடியருளியுள்ளார்.

இத்தலத் திருக்கோயிலில் சோழ மன்னர்களில் ''பூமேவி வளர்' என்று தொடங்கும் மெய்கீர்த்தியையுடைய இராசகேசரி வர்மனாகிய திரிபுவனச் சக்கரவர்த்தி இராச இராச தேவர் இவர்கள் காலங்களில் செதுக்கப் பெற்ற ஆறு கல்வெட்டுக்களும் ஒரு தமிழ்ச் செய்யுளுமாக ஏழு கல்வெட்டுகள் இருக்கின்றன. இக்கல்வெட்டுக்களில் இத்தலத்தின் பெயர் சாத்தமங்கலம், சாத்தமங்கை எனவும், திருக்கோயிலின் பெயர் அயவந்தி என்றும்; இறைவரின் திருப்பெயர் அயவந்தி உடையார் என்றும் குறிக்கப் பெற்றுள்ளன. திரிபுவனச் சக்கரவர்த்தி இராச இராச சோழ தேவரின் பதின்மூன்றாம் ஆண்டில் கணிச்சைப் பாக்கத்துத் திருவேகம்ப உடையார் இவ்வூரில் முடிகொண்ட சோழப் பேராற்றங்கரையில் ஒரு தண்ணீர்ப் பந்தரை ஏற்படுத்தி அதற்கு நில நிபந்தம் அளித்திருந்தனர். அத்தண்ணீர் பந்தல் நடைபெறாது இருந்தமையால் சாந்தமங்கலத்துச் சபையார் அந்நிலத்தை அத்திருவேகம்பனால் திருச்செங்காட்டங்குடியில் ஏற்படுத்திய சிறுத்தொண்டன் திருமடத்திற்குக் கொடுத்துவிட்டனர். செய்யுள் வடிவில் உள்ள கல்வெட்டு இறைவர், இறைவியரின் புகழைப் பற்றி கூறுகின்றது. ஏனைய கல்வெட்டுக்கள் நந்தா விளக்குகளுக்கு நிபந்தங்கள் அளித்ததைப் பற்றிக் கூறுகின்றன. இத்திருககோயிலில் சிறுத்தொண்டநாயனாரின் 'பிரதிமம் இருந்ததைப் பற்றி திரிபுவனச்சக்கரவர்த்தி இராச இராச தேவரின் இரண்டாம் ஆண்டு கல்வெட்டுத் தெரிவிக்கின்றது.

# கந்தவேள்



# கருணை

டாக்டர் திருமுருக கிருபானந்தவாரியார்

(57)

வள்ளி பிராட்டியாருக்குத் திருவருள்புரிய வேண்டும் என்று திருவுளங்கொண்ட முருகக் கடவுள் மானிட வடிவம் பூண்டார். காலில் வீரக்கழல் அணிந்து, வில்லும் அம்பும் ஏந்தி வேட்டுவக் கோலத்துடன் தணிகைமலையினின்றும் நீங்கி வள்ளி மலையை அடுத்த தினைப்



புனத்தை அடைந்தார். இருந்த பரண் மீது வள்ளி நாயகியாரை அணுகி இன்ப மயக்கம் கொண்டவர்போல் நடக்கலானார்.

முருகப் பெருமான் வள்ளி நாயகியாரை நோக்கிப் பேசினார். 'வாள் போன்ற கண்களையுடைய பெண்ணே! உலகிலுள்ள மாதர்கட்கெல்லாம் இறைவியாகிய உன்னை உன்னதமான இடத்தில் வைக்காமல் வேட்டுவர்கள் தனியே இந்தக் கானகத்தில் தினைப்புனத்தைக் காக்க வைத்தனரே. அவர்களுக்குப் பிரமன் அறிவைப் படைக்க மறந்து போய்விட்டான் போலும்!'

'நாந்தகம் அனைய உண்கண் நங்கைகேள்
ஞாலந் தன்னில்
ஏந்திழை யார்கட்கெல்லாம் இறைவியாய்
இருக்கும் நின்னைப்
பூந்தினை காக்க வைத்துப் போயினார்
புளினரா னோர்க்கு
ஆய்ந்திடும் உணர்ச்சி ஒன்றும் அயன்படைத்
திலன்கொல் என்றான்''

வள்ளி பதில் பேசவில்லை. வேட்டுவச் குமரனுடைய நடவடிக்கைகளைக் கவனித்து வநதாள். முருகப் பெருபான் பேலும் பேச்சைத் தொடர்ந்தார். 'பெண்ணமுதே! உன் பெயர் என்ன? உன் ஊர் யாது? நின் ஊருக்கு போகும் வழி எது?' என்றார்.

வள்ளி மீண்டும் பதில் ஏதும் பேசவில்லை. முருகப் பெருமானிடம் இன்முகம் காட்டவில்லை. முருகப் பெருமான் பேசப் பேச வள்ளியின் முகம் வேறு திசையில் திரும்ப ஆரம்பித்தது. அவள்மனம் கல்லாகிவிட்டதோ? முருகப் பெருமான் மனம் உருகிவிட்டது. தன்னிடம் பேசாவிட்டால் பின்னர் வள்ளிக்குப் பெரியபழி ஒன்று ஏற்படும் என்று கூறிப் பயமுறுத்தினார்.

''மொழியொன் றுபுகலா யாயின் முறுவலும்
புரியா யாயின்
விழியொன்று நோக்கா யாயின் விரகமிக்
குழல்வேன் உய்யும்
வழியொன்று காட்டா யாயின் மனமுஞ் சற்
றுருகா யாயின்
பழியொன்று நின்பாற் சூழும் பராமுகம்
தவிர்தி என்றான்'

'உளைப்படு மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போலே வருந்தியே யிரங்கா நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம்புனலிற் றோன்றி
அலைப்படு தன்மைத் தன்றோ அறுமுகன் ஆட லெல்லாம்.''

முருகப் பெருமான் அனலிற்பட்ட மெழுகு போல் உருகிப் பலவாறு வள்ளி நாயகியாரிடம் அன்பு மொழி பகர்ந்து கொண்டிருந்தபோது வேட்டுவர் தலைவனாகிய நம்பிராஜன் தன் பரிசனங்கள் சூழ அங்கு வந்தான். உடனே, முருகப் பெருமான் அடி வேதங்களாகவும், நடு ஆகமங்களாகவும், கிளைகள் யாவும் பல கலை களாகவும் கொண்டு ஒரு வேங்கை மரமாக நின்றார்.

''ஆங்கது காலை தன்னில் அடிமுதல் மறைகளாக
ஓங்கிய நடுவ ணெல்லா முயர்சிவ நூல தாகப்
பாங்கமர் சுவடு முற்றும் பல்கலை யாகத் தானோர்
வேங்கையி னுருவ மாகி வேற்படை வீரன் நின்றான்.'

நம்பிராசன் தம் மகளுக்குத் தேனும் தினை மாவும் கிழங்குகளும் தந்தான். ஆங்குள்ள வேங்கை மரத்தைக் கண்டான். அவனோடு வந்த வேட்டுவர்கள் 'இது முன்பு இருந்த மரமன்று; புதிதாக இப்படி ஒரு மரம் இங்கு ஏற்பட்டிருக்கிறது. திடீரென்று தோன்றிய இந்த மரத்தினால் நிச்சயம் தீங்கு வரும். ஆதலால் இதனை வெட்டி எறிய வேண்டும்' என்றனர். மரத்தை வெட்டவும் அவர்கள் முயன்றனர்.

மரத்தை வெட்ட முயன்ற அவர்களை விலக்கிய நம்பிராசன், தன் மகளை நோக்கி, ''குழந்தாய் வள்ளி இம்மரம் இங்கு எவ்வாறு உண்டாயிற்று''? என வினவினான்.

''அப்பா! இதன் வரலாறு நான் அறியேன் இது இப்போதுதான் இங்கு தோன்றியது' என்று வள்ளி கூறினாள்.

''அம்மா; அஞ்சாதே இம்மரம் உனக்கு நிழல் தந்து உதவும்'' எனச் சொல்லி விட்டுத் தன் குழாத்துடன் சிற்றூர் சென்றான் நம்பிராசன்.

நம்பிராசன் தன் பரிசனங்களுடன் திரும்பிச் சென்றதும், குமாரக் கடவுள் வேங்கை மர வடிவம் நீங்கி முன்போல் மானிட வடிவம் கொண்டார். பருவ மடந்தையை மயக்குவது கட்டிளங் காளையாகிய பரம புருஷனுடைய எழிலன்றோ! கண்ணைக் கவரும் கட்டிளங்காளையாக வந்து முருகன் வள்ளியிடம் பேச்சுக் கொடுத்தார். 'மாதரசே, உன்னையே புகலாக வந்தடைந்தேன்! இனி உன்னைப் பிரிந்து வாழேன். உன் கண்ணாகிய வலையில் அகப்பட்டஎனக்குஅருள் புரிவாயாக.



என்னை மணந்து இன்பத்தைத் தருவாயாக! உன் மீது மையல் கொண்ட என்னை மறுக்காமல் ஏற்றுக் கொள்! உலகமெல்லாம் வணங்கும் உயர் பதவியை உனக்குத் தந்தருள்வேன்' என்று கூறியருளினார்.

முருகப் பெருமானின் மனக் கருத்தை அறிந்த வள்ளிநாயகி நாணம் கொண்டாள். 'ஐயா! நீங்கள் உலகம் புரக்கும் உயர்குலச் செம்மல். நான் தினைப்புலம் காக்கும் இழிகுலமாகிய வேட்டுவச்சாதிப்பெண். தாங்கள் கேவலம் குறத்தியை விரும்புவது தகாது. புலி பசித்தால் புல்லைத் தின்னுமோ?' என்று

கூறினாள். சுவாமியை அறிந்தபோதே அவரை அறியாதவள் போலவும் பேசினாளோ? அவள் பேசிக்கொண்டிருக்கும்போதே வேடர் பரிவாரம் சூழ உடுக்கை முதலிய ஒலியுடன் அங்கு மீண்டும் வந்தான் நம்பிராசன். படை ஒன்று பேரொலியுடன் வருவது போல் இருந்தது அக்காட்சி.

நம்பிராசன் தன் பரிவாரங்களுடன் வருவதைக் கண்டு வள்ளிநாயகியார் அஞ்சி நடுங்கி குமாரக் கடவுளை நோக்கி 'ஐயா என் பிதா வருகிறார். வேடர்கள் மிகவும் வலிமை உடையவர்கள். தீயவர்கள், நீங்கள் பிழைக்கநினைத்தால் இங்கிருந்து ஓடிப்போய்விடுங்கள்' என்றாள். வள்ளிநாயகியார் தம்மீது கொண்ட அன்பை எண்ணிவேற் பரமன் வேடர் எதிரில் விருத்த தவ வேடங்கொண்டார்.

தன் பரிசனங்களுடன் அங்கு வந்த நம்பிராசன் அத்தவக்கிழவரைக் கண்டு வியந்து நின்றான்.

பெருமான் அவனை நோக்கி 'உனக்கு வெற்றி உண்டாகுக; நின் குலம் தழைத்து ஓங்குக; சிறந்த வளம் பெற்று வாழ்க'' என்று திருநீறு தந்தருளினார்.

நம்பிராசன் அவர் திருவடிகளை வணங்கி 'சுவாமி! இந்த மலைக்குத் தாங்கள் வந்த காரணம் யாது? தங்களுக்கு வேண்டியது யாது? கூறும்'' என்று கேட்டான். 'நம்பீ! இந்தக் கிழப்பருவம் நீங்கி இளமை வரவும் உள்ளத்தில் உள்ள மயக்கம் நீங்கவும் இங்குள்ள குமரியில் ஆடவந்தேன்' என்று அருளிச் செய்தார் எம்பிரான். குமரி என்பது தீர்த்தத்தைக் குறிப்பிடுமாறு இப்படி பேசினார்.

'சுவாமி தாங்கள் கூறிய தீர்த்தத்தில் மூழ்கிச் சுகமே இருப்பீராக! எனது புதல்வியும் இங்கு தனித்திருக்கிறாள். தாங்களும் அவளுக்குத் துணையாயிருப்பீராக' என்றான் நம்பிராசன்.

ஆறுமுகங் கரந்த அண்ணலும் 'அழகுதாம்' என்றார் குறும்பாக.

வள்ளிநாயகியிடம் அப்பெரியவரை அழைத்துச் சென்ற நம்பி, 'அம்மா! இக் கிழ முனிவர் உனக்குத் துணையாக இருப்பார்' என்றான். காயும் கனியும் தேனும் தினைமாவும் தந்துவிட்டு வேடுவர்களுடன் ஊர் திரும்பி சென்றான்.

நம்பிராசன் ஊர் திரும்பிச் சென்றதும் பெரியவர் வள்ளியின் முருகப் பக்தியைச் சோதித்தார்.

அவ்வருந்தபசி வள்ளிநாயகியாரிடம், 'அருந்த பசி' என்றார்.

வள்ளியம்மையார் தேனும் தினைமாவும் நற்கனிகளும் கொடுத்தாள். அதனை வாங்கி உண்ட பெரியவருக்கு நீர்வேட்கை மிகுந்தது. 'தண்ணீர் தண்ணீர்' என்று கேட்டார்.

வள்ளியம்மையார் அதனைக் கேட்டு 'சுவாமி! இங்குள்ள ஆறு மலை தாண்டிச் சென்றால் ஏழாவது மலையில் சுனை இருக்கிறது. அங்கே போய்த் தண்ணீர் பருகி வாருங்கள்' என்றாள்.

''பூட்டுவார் சிலைக்கை வேடர் பூவையே!
புலர்ந்த தெண்ணீர்
வேட்டனன் விருத்தன்வெற்பில்
வியனெறிசிறுந் தேரேன்
தாட்டுணை வருந்து மென்று தாழ்த்திடா
தொல்லை யேகிக்
காட்டுதி சுனைநீ ரென்றான் அறுமுகங் கரந்த
கள்வன்,''

'பெண்ணே! நான் புதியவன், மலைவழியறியேன். நீ வந்து வழி காட்டு' என்றார் முதியவர். பெருபாட்டியார் விருத்தரை வித்தியாசமின்றிக் கைப்பிடித்து அழைத்துச் சென்று சுனையில் நீர் பருகச் செய்தாள்.

பசித் துன்பம் நீங்கிய முனிவருக்கு அருட்பசி எடுத்தது. அதனைக் காதலாக வெளிப்படுத்தினார். 'பெண்ணமுதே! எனக்குப் பசியும் நீங்கிற்று; தாகமும் நீங்கிற்று. உன் மீது வைத்த மோகம் நீங்கியதில்லை.. பசியையும் தாகத்தையும் தணியச் செய்தது போலவே மோகத்தையும் தணியச் செய்வாய்' என்று கூறினார்.

சினமறியாத மதுரக் குற வள்ளியாரும் அப்போது சினம் கொண்டு சீறினாள். கற்புச் செல்வம் அல்லவா?


மோகமுற்ற முதியவரிடம் வள்ளியம்மை சீற்றத்துடன் கூறினாள்.

''நத்துப் புரைமுடியீர்! நல்லுணர்வு சற்றுமிலீர்
எத்துக்கு மூத்தீர், இழிகுலத்தேன் தன்னை
வெஃகி
பித்துக்கொண்டார் போல் பிதற்றுவீர்
இவ்வேடர்
கொத்துக் கெலாம்ஓர் கொடும்பழியைச்
செய்தீரே''.

''பெரியவரே! தவவேடம் கொண்ட உமக்கு இவ்வெண்ணம் தகுதியோ? புனங்காக்கும் சிறுமியாகிய என்னை இரந்து நிற்றல் உமது பெருமைக்கு அழகோ? உம் செய்கையை எனது குலத்தார் அறிந்தால் உமக்குப் பெருங்கேடு விளையும். உமக்கு நரை வந்தும் நல்லுணர்வு வரவில்லையே! பித்தரைப் போல் பிதற்றி உமது குலத்துக்கும் இவ்வேட்டுவர் குலத்துக்கும் பெரும் பழியைச் செய்து விட்டீர்'' என்று வெறுத்துப் பேசினாள் பிராட்டி. இதன் பின்னும் கிழவருக்குத் துணையிருத்தலாகாதெனக் கருதிப் புனங்காக்கப் புறப்பட்டுச் சென்றாள்.

வள்ளிப் பிராட்டியார் செல்லுவதைக் கண்ட தனக்குவமை இல்லாத் தலைவர் விக்கினங்களையெல்லாம் நீக்கும் தந்தி முகத்து எந்தையை 'முன்னே வருவாய் முதல்வா!, என்று துதித்தார்.

—(தொடரும்)




கம்பன் கவிநயமணி

**வே. தியாகராஜன்** **[27]**

இறைவன் மானிடருக்கு மட்டும் அருள் புரிபவன் அன்று. அத்தி முதல் எறும்பு ஈறான அத்தனை உயிர்களுக்கும் அருள்புரியும் பேரருளாளன். மதுரைக்கு அருகில் இன்று குருவித்துறை என அழைக்கப்படும் குருவிருந்த துறையில் வியாழ பகவான் தவம் செய்து கொண்டிருந்தார். அவ்வூரிலிருந்த சகலன்சகலை என்ற தம்பதிகளுக்கு பன்னிரண்டு மக்கள் உண்டு. வேளாளர் குலத்திலே பிறந்தஅவர்கள் தமது மக்களைச் சிறு வயதில் கண்டிக்காது விட்டதால் குழந்தைகள் நெறி தவறினர். தாய் தந்தையரை இழந்தபின், அப்பன்னிருவரும் தமது குலத்தொழிலை மறந்து காட்டில் வேட்டையாடச் சென்று, அங்கு புதர்களுக்குள் மறைந்து தவமியற்றும் பெரியோராகிய வியாழ பகவானை இன்னார் என்று அறியாது, கற்களை விட்டெறிந்து, கேலி செய்து துன்புறுத்தினர். இதனால் கோபமடைந்த வியாழபகவான் நீங்கள் பன்னிருவரும் பன்றிக்குட்டிகளாகப் பிறந்து பாலில்லாது பரிதவிப்பீர்களாக' எனச் சாபமிட, அவர்கள் மனம் வருந்தி வியாழ பகவானை வேண்ட 'மதுரை நாயகனான சிவ பெருமானே உங்களுக்குத் தாய்ப் பன்றியாக வந்து பால்கொடுத்து உங்களைப் பாண்டி நாட்டு மந்திரிகளாக்கி முத்தியளிப்பார்.'' என்று கூறினார். அவ்வாறே அவர்கள் மதுரைக்கு அருகிருந்த ஒரு காட்டில் பன்றியரசன் ஒருவனின் மக்களாகப் பிறந்தனர்.

இது இவ்வாறாகப் பாண்டியன் காட்டில் வேட்டைக்குப் புறப்பட்டு வந்தான். பன்றியரசனிடம் பன்றிகள் வந்து ''மகாராஜா பாண்டியராசன் காட்டிலுள்ள மிருகங்களையெல்லாம் கொன்று வருகிறான்'' எனக்கூற, பன்றியரசன் தன் மனைவியான பெண் பன்றியிடம் 'இன்று சண்டையில் தோற்பேனோ? அல்லது பாண்டியனால் கொல்லப்படுவேனோ? நீ உன் மக்களைப் பாதுகாத்துக் கொண்டு இங்கேயே இரு' என்றான். பெண் பன்றி, ''இக்குட்டிகளை எல்லாம் தெய்வம் காப்பாற்றும். சண்டையில் நீங்கள் கொல்லப்பட்டால் நானும் இறப்பேன். நானும் உங்களுடன் வருகிறேன்' எனக் கூறித் தானும் பின் சென்றது. கூட வந்த பன்றிகள் அனைத்தையும் பாண்டியன் கொன்றபோது 'உயிர்தப்பி ஓடிப் போய் எங்கேயாவது குட்டிகளுடன் வாழுவோம் வாருங்கள்' என ஆண் பன்றியிடம் பெண்பன்றி கூற, ஆண்பன்றி 'நல்லறிவுடன் என்ன படித்தாலும் பெண்புத்தி பேதைமையாகுதே. நீர்த்துறையில் இரண்டு சிங்கங்கள் நீரருந்த வந்தால் ஒரு பன்றி அங்கு நின்றால் பார்க்க அஞ்சும். பன்றியோ அஞ்சாமல் நீர் குடித்து மீளும். நான் வீரமரபிலே வந்தவன்' என்று கூறி, போராடி உயிர்நீங்கி வீரமரணம் பெற்றது. பெண்பன்றி சண்டையிட, 'மிருகமான போதிலும் பெண் இனத்துடன்சண்டையிடலாகாது'' எனப் பாண்டியன் ஒதுங்கினான். சருச்சரன் என்ற ஒரு வேடன் அப்பெண் பன்றியுடன் சண்டையிட்டுப் பெண்பன்றியைக் கொன்று தானும் இறந்தான். பன்றிகள் விழுந்து இறந்த இடம் பன்றிமலை என இன்றும் விளங்குகிறது. அங்கு ஞானிகள் வசிக்கின்றனர்.

ரங்க வித்யாதரன் என்ற ஒரு இயக்கன் இன்னிசைபாட, தனது நிலை அதனால் குலைந்தது என்ற கோபத்தில் புலத்திய முனிவர்அவனைப் பன்றியாகுமாறு சபித்தனர். பாண்டியன் உன்னைக் கொல்லுவான். உனது பழைய உருவம் பெறுவாய்' என்றும் கூறினார். புண்ணியவுரு உடையோனானதால் அவனது உருவம் ஞானிகள் தங்கும் பெருமையுடைய புனிதமான பன்றிமலையாயிற்று.

இவ்வாறு தாய் தந்தையரை இழந்து தடுமாறிய பன்றிக் குட்டிகளுக்கு இறைவனான சோமசுந்தரப் பெருமான் தானே தாய்ப் பன்றியாக வந்து பால் கொடுத்தனர்.

''கிட்டுகின்றன தம் தாயெதிர் குட்டியும் கிட்டு
முட்டுகின்றன மோப்பது முதுகுறத்தாவி
எட்டுகின்றன கால்விசைத்தெறிவன நிலத்தை
வெட்டுகின்றன குதிப்பன ஓடுவ மீள்வ''

இறைவனது பாலைக் குடித்தமையால் ஞானமும் நற்குணங்களும் படிந்தன. முகம் மாத்திரம் பன்றியாகவும் உடல் மனிதர் போலவும் மாற்றி, சோமசுந்தரப் பெருமான் மீனாட்சி அம்மையிடம் வந்தனர். 'கொடியவிலங்குகளான அறிவற்ற பன்றிகளுக்கும் பால் கொடுத்தீர்களே' என அம்மை கூற, 'என்னை எல்லா உயிர்கட்கும் தயை காட்டுபவன்' என வேத புராணங்கள் கூறுகின்றன. எனவே எமக்கு வேறுபாடு கிடையாது.''

''அகில வேத ஆகமபேதமும் நம்மைச்
சகல சீலதயாபரன் என்றுரை சார்பால்
இகலில் சேதனம் அசேதனம் ஆகிய இரண்டும்
புகலில் வேறலஎமக்கு அவை பொதுமைய
அதனால்'

தாயற்ற அவைகளுக்குப் பாலளித்தோம். இனி அவர்கள் பாண்டியனுக்கு மந்திரிகளாக விளங்கிப்பின் நம் கணத்தில் சேர்ந்து விடுவார்கள்' எனக் கூறினார் இறைவன்.



அன்று இரவில் பாண்டியனது கனவில் இறைவன் தோன்றி 'பன்றி மலையில் பன்றி முகத்துடன் பன்னிருவர் உள்ளனர். அவர்க களை உனது மந்திரிகளாக்கிக் கொள்க' என்ற னர். பாண்டியன் அவர்களைத்தன் மந்திரி களாக்கிக் கொண்டதுடன் பழைய மந்திரி களின் பெண்களை அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தான். அவர்களும் அரசனுக்கு நல்ல மந்திரிகளாக விளங்கி அரசை நன்கு நடத்த உதவினர். இது இவ்வாறாக.

சுகுணபாண்டியன் அரசு புரியுங்கால், 'புண்ணியங்களே செய்து, சிறிது பாவம் செய்த ஒருவன் கரிக்குருவியாகப் பிறந்தான். மற்ற பறவைகள் கரிக்குருவியைத் தலையில் கொத் தின. வேதனையடைந்த குருவி மரத்தில் அமர்ந்திருக்க, தற்செயலாக அம்மரத்தினடி யில் சிவசின்னம் தரித்த ஒருவன் 'மூர்த்தி விசேடம், தீர்த்த விசேடம் தல விசேடம் மூவகைச் சிறப்பும் உள்ளது மதுரை ஒன்றே. இங்கு எழுந்தருளியுள்ள சிவபெருமான் யாவ ருக்கும் இகபர சுகங்களைத் தரக்கூடிய பெரி யோன்' எனக் கூறக்கேட்டு, மதுரை சென்று பொற்றாமரையில் நீராடி, இறைவனை வலம் வந்து வணங்கியது. மூன்று தினங்களில் இறை வனும் அம்மையும் இதனைக்காண, அம்மை யிடம் குருவியின் வரலாற்றை இறைவன் கூறி னார். பின் அக்குருவியை அழைத்து, மர ணத்தை வெல்லும் மீருத்யுஞ்சய மந்திரத்தை உபதேசிக்க, அக்குருவி 'இறைவனே! என் வணக்கத்தை ஏற்றருள்க' எனக்கூறி குற்றங் குறை தெரியாது எப்படி எப்படியோ நடந்த என்னையும் ஆட்கொண்டனையே! எளிய வரைத் தேடி ஆட்கொள்ளுவது உன் கருணையா?'' எனப் போற்றியது.

''தெளிதலின்றியே செய்த தீமையால்
விளியும் என்னையும் ஆளல் வேண்டுமோ?
எளியர் எங்குளார் என்று தேடியே
அளியை ஆவதுன் அருளின் வண்ணமோ''

''இறைவனே! உன் தரிசனத்தாலும் உபதேசத் தாலும் பெருமை பெற்றேன். எனக்கு ஒரு குறை! நான் மிக எளிய பறவையாய் இருப்ப தால் மற்ற பறவைகள் என்னைத் துன்புறுத்து கின்றன'. எனக்கூற, இறைவன், 'பறவை களுக்கெல்லாம் வலியன் ஆவாய்' என, குருவி 'என் மரபு பூராவும் அவ்வாறே வலிமையடைய வேண்டும்' என, இறைவன் அவ்வாறே அருளி னார். 'தக்கவன் ஒருவன் வாழத் தன் கிளை வாழும்' என்பது இக்கரிக்குருவியால் ஏற்பட்ட பழமொழி.


பன்றிக்கும் குருவிக்கும் மாத்திரமா கருணை செய்தான் மதுரைப் பெருமான். மதுரையருகிலிருந்த ஒரு குளத்தில் நாரை ஒன்று மீன்களைப் புசித்து வந்தது. குளம் வற்றவே மகரிஷிகள் குளிக்கும் 'அச்சோதீர்த் தம்' என்ற இடத்தை அடைந்து, அங்குரிஷிகள் குளிக்கும்போது அவர்கள் முடியிலும் தோள் களிலும் துள்ளி விளையாடும் மீன்களைக் கண்டு ''மகரிஷிகளான இவர்களது உடலைத் தீண்டுதற்கு இம்மீன்கள் என்ன தவம் செய் தனவோ? இவற்றைத் தின்னக் கூடாது' என இரையை வெறுத்தது. நீராடிய முனிவர்கள் கரையிலமர்ந்து சிவபுராணத்தையும் சிவராஜ தானியான மதுரை பற்றியும் ஓதலாயினர். இதைக் கேட்ட நாரை மெய்யறிவு பெற்று மதுரை சென்று நீராடி, சோமசுந்தரப் பெரு மானது அரு[illegible] வணங்கியது. பதினைந்து நாட்கள் உணவில்லாதிருந்த நாரை பதினாறானது நாள் நீராடும் போது, அங்குள்ள மீன்களைக் கண்டு பசி காரணமாக அவற்றைத் தின்ன வேண்டுமென்ற எண்ணம் கொண்டது. பிறகு மீண்டும் நல்லறிவு கொண்டு 'ஐயோ இந்த புண்ணிய தீர்த்தத்தி லிருந்த மீன்களை உண்ண வேண்டுமென்ற எண்ணம் உண்டானது குற்றமன்றோ! என் பிறவிப் பிணி ஒழியாதே! என எண்ணி வருந்தி யது. அந்நிலையில் இறைவன் அதன் எதிரிலே தோன்றி, 'உனக்கு என்னவரம் வேண்டும்'? எனக் கேட்க 'இறைவனே இவ்வுடலை நீக்கி நான் சிவலோகத்தில் சென்று வாழ வேண்டும். என் குலத்தைச் சேர்ந்த நாரைகள் பொற்றா மரையிலுள்ள மீன்களை தின்றால் பாவத் திற்கு ஆளாகும். எனவே பொற்றாமரையில் மீன்களே இருக்கக்கூடாது' என வரம் வேண்டி யது.



'என்றும் இத்தடம் மீன் இலவாக நீ
நன்று சாலவரம் நல்கென; வெள்ளிமா
மன்றுளானும் வரம் தந்து போயினான்
சென்று நாரை சிவலோகம் சேர்ந்ததால்''

அன்று முதல் பொற்றாமரையில் நீரில் வாழும் எந்த உயிரினமும் இல்லை. தனது குலம் நற் கதியடைய வேண்டுமென்ற நல்ல உள்ளத்தில் நாரை இறைவனிடம் வேண்டிய வரத்தை புகழுவதா? இறைவன் அருளைப் போற்றுவதா? ஈசனடியாருக்கு எதுவும் எளிது.

(தொடரும்)


சித்திர பாரதம்
க.வ: செவ்வேள்
படம் MURAJA
"அரசர் இல்லாத நேரத்தில் படையெடுத்து வந்துள்ளார்களே பகைவர்கள்? என்ன செய்யலாம்" என்று சுதேட்டினை மயங்க... உத்தரகுமாரன் "அம்மா! ஆணையிடுங்கள். நான் போய் பகைவர்களை வென்று ஆநிரைகளை மீட்டு வருகின்றேன். எனக்குத் தேரோட்ட ஒரு தேரோட்டி மட்டும் ஏற்பாடு செய்யுங்கள் போதும்" என்கிறான்.
விரத சாரிணி பேடி வடிவு கொண்டு திகழும் அருச்சுனனை அழைத்து வருகிறாள்.
அரசி! இப்பிருகந்நளை அருச்சுனனிடம் தேரோட்டிக் கொண்டிருந்தவள். இவள் உத்தர குமாரனின் தேர் ஓட்டுவாள்.
அரசி இணங்க, பிருகந்நளை நான்கு நல்ல குதிரைகளைத் தேர்ந்து தேரில் பூட்டி ஆயத்தம் செய்கிறாள். பிருகந்நளை தேரைச் செலுத்த உத்தர குமாரன் மிகக் கம்பீரமாகப் போருக்குப் புறப்படுகிறான்.
துரியோதனனின் படை இருக்கும் இடம் வரை வீரமாகவே போய்ச் சேரும் உத்தரகுமாரன் திரண்டு நிற்கும் படையைக் கண்டதும் நடுக்கம் கொள்கிறான்.
இவ்வளவு படைகளா? எனக்கு அச்சமாக இருக்கிறது. பிருகந்நளை தேரை உடனே திருப்பு.
உத்தரகுமாரா அஞ்சாதே! வில்லை வளைத்துக் கணைகளைத் தொடு. வீரத்திருமடந்தை உனக்கு வெற்றியே கொடுப்பாள்.
அச்சத்தால் உடல் வியர்க்க உத்தர குமாரன் "போர் வேண்டாம். ஆநிரைகள் போனால் போகட்டும். தேரைத் திருப்பு" என்று அடம் பிடிக்கிறான். பிருகந்நளை மறுக்கவே உத்தர குமாரன் தேரிலிருந்து திடீரென குதித்து ஓட்டம் பிடிக்கிறான்.
பிருகந்நளையும் உத்தரகுமாரனை விரட்டிச் சென்று அவனைப் பிடித்துத் தேர்க்காலில் கட்டிப் போட அதைக் காணும் குருகுலப் படை கேலி செய்து நகைக்கிறது.


தேரை ஊர் எல்லையிலிருக்கும் காளி கோவிலு-க்குக் கொண்டு வந்து நிறுத்தும் பிருகந்நளை, வன்னி மரத்தில் ஒளித்து வைத்திருந்த தன் காண்டீபத்தை மந்திரம் கூறி எடுக்கிறாள்.
இது யாருடைய வில்
இதுவா, அருச்சுனனுடையது
மகாவீரர் அருச்சுனன் இப்பொழுது எங்கே இருக்கிறார்?
அவர் இங்கே தான் இருக்கிறார் உத்தரா
"அவரை நான் காண முடியுமா"? என "கொஞ்ச நேரம் பொறு! பார்க்கலாம். அதுவரை நல்ல பிள்ளையாய் நீ எனக்குத் தேரை ஓட்டு துரியோதனனின் படைகளை நான் ஒரு கை பார்க்கிறேன்" என்கிறாள் பிருகந்நளை
நான்கு கடிகை நேரம் கழிந்ததும் பேடி வடிவம் நீங்கி தன் உண்மை வடிவத்துடன் வெளிப்படுகிறான் அருச்சுனன். அக்கினி கொடுத்த தேரும் அநுமக் கொடியுடன் வர அதில் ஏறிப் பகைவர்மேல் கணைகளைத் தொடுக்கிறான் அருச்சுனன்.
அச்சம் நீங்கிய உத்தரகுமாரன் தேரை ஓட்ட பிருகந்நளை துரியோதனன் படையிருக்கும் இடம் வந்து போரிடுகிறாள். ஆநிரைகளை நொடிப்பொழுதில் மீட்டு இடையர் வசம் ஒப்படைத்து விடுகிறாள் பேடி.
துரியோதனன் ஏறிவந்த தேரையும், குதிரைகளையும் அருச்சுனன் அழிக்க, துரியோதனன் வேறொரு
தேரில் ஏறித் தப்பியோட, கர்ணன் போருக்கு வர அவன் உடலில் பல கணைகளைச் செலுத்தி அவன் தேரையும் சிதைத்து அழித்து விடுகிறான் அருச்சுனன். அருச்சுனனை எதிர்த்து வீடுமரும் துரோணரும் போருக்கு வர அம்புகளாலேயே
அப்பெரியவர்களுக்கு வணக்கம் செய்கிறான்.
"நான் வஞ்சகர்களோடு போரிடுவேனே தவிர உங்களோடு போர் செய்ய மாட்டேன்."
செஞ்சோற்றுக் கடனுக்காய் நாங்கள் போரிட வந்துள்ளோம் அர்ச்சுனா! காலகேய நிவாத கவசர்களை வென்ற மகாவீரனான நீ எங்களோடும் போரிட்டு உன் ஆற்றலைக் காட்டு.

# கீதைக் குறள்கள்



**அறநெறியண்ணல் கீ.பழநியப்பனார்**

உடம்பு ஆன்மா பரமான்மா உறவுகள்

(சேத்ர சேத்ரக்ஞ விபாகயோகம்)

(குறிப்பு: இயற்கை, உடம்பு, ஆன்மா இவற்றை ஆள்வோன், அறிவு, அறிவிப்பவன், அறியப்படுவன் முதலியன பற்றி அறிந்து கொள்ள அருச்சுனன் விரும்புகிறான்) (13[1)

வினைகள் விளையும் வயலாம் உடம்பு
தனைஆள் பவன்புரு டன் (13[2)

உடம்புள் உறைவது நானே இதனைத்
திடமாய் அறிவதுஞா னம் (13[3)

எப்பொழுது எங்கிருந்து வந்ததிவை என்பதை
செப்புவேன் நான்சுருக்க மாய். (13[4)

மெய்ப்பொருளே ஆதியென மேலோர் பலவகை
செய்யுட் களால்பாடி னர் (13[5)

கன்மஞா னேந்திரியங் கள்கரணங் கள்மற்றும்
தன்மாத் திரைபூதங் கள் (13[6)

விருப்பு வெறுப்பும் அதனுடன் கூடிப்
பருவுடலாய்க் காட்சி தரும் (13[7)

தருக்கின்றித் தானடங்கித் தற்பெருமையற்றுப்
பெருமுயற்சி செய்வ துடன் (13[8)

பொறுமை, குருவினைப் போற்றுதல், தூய்மை
உறுதி, இன்னா செய்யாமை யோடு (13[9)

புறப்பொருள் நாட்டம் இலாது பிறப்பும்
இறப்பும் முதுமையும் ஓர்ந்து (13[9)

மக்கள் மனைவி தனதுடமை யாவையும்
ஒக்க விருப்பு வெறுப்பு (13[10)

இன்றியே, பற்றற்று நோன்புகள் ஏற்பதுடன்
என்றும் நடுநிலை நின்று (13[10)

எனையன்றி வேறெதையும் எண்ணாது தூய
மனையொன்றி னில் தனி யாய் (13[11)

ஆன்மஅறி வால்தேர்ந்த உண்மையை ஆய்வதால்
தோன்றும் அறிவேஞா னம் (13[12)

மீண்டும் பிறப்பதை வேரறுக்கும் ஓர்வழி
ஈண்டுநான் சொல்கிறேன் கேள்; (13[13)

இல்லதோ அன்றி உள்ளதோ என்பது
சொல்லரிதாம் ஆதியிலா ஒன்று (13[13)

எண்ணற்ற கால்தலைகை கண்செவி எத்திக்கும்
மண்டி நிறைந்தன வாம்; (13[14)

புலன்வழி கர்மம் புரிந்திடினும் அந்தப்
புலன்களுக்கப் பாற்பட்ட தாம்; (13[15)

பற்றற்ற தென்றாலும் பற்றியே அண்டத்தை
முற்றும் சுமந்துநிற்கு மாம்; (13[15)

எக்குணமும் இல்லாத தென்றே கருதினும்
அக்குணங்க ளைநுகர்வ தாம்;

பொருள்களில் உள்ளும் புறமும் உறைந்தே
அருகிருந்தும் எட்டாத தாம்; (13[16)

கண்களால் காண இயலாத நுண்பொருள்;
துண்டு படாதவொன் றாம்; (13[16)

உயிர்கள் தோறும் உறைந்தே அவற்றை
உயிர்பித் தொடுக்குவ தாம்; (13[17)

ஒளிக்கே ஒளியாகி மற்றும் இருளைத்
தெளிவித்து நிற்பது வாம்; (13[18)

அறிவாய் அறிபொருளாய் நல்கும் பயனாய்
அறிவிக்கும் உள்ளொளி யாம்; (13[18)

உடம்பு உயிர்கள் இறைவனைப் பற்றித்
தொடர்ந்து செப்பினேன் நான் (13[19)

இவ்வுண்மை நன்குணர்ந்தோர் என்னரும் பக்தராகி
அவ்வண் எனையடை வர் (13[19)

பிரகிருதி புருடன் பிறப்பற் றனவாம்;
பிரகிருதி காரண மாம் (13[20)

பாரிலுள பல்வேறு வேற்றுமை யாவிற்கும்;
தேரிடுக நன்றி தனை (13[20)

காரிய காரணம் தோன்றிடக் காரணம்
தேரின் பிரகிருதி யாம். (13[21)

புருடனுக்குத் துக்கசுகம் புல்கும் உணர்வைத்
தருவதே காரண மாம். (13[21)

மாயையின் பல்குணங்கள் ஆன்மாவை
வன்மையாய்த்
தோய்ந்து பிறப்பைத் தரும் (13[22)

உடம்பில் உறையுமோர் சாட்சியாய் நட்பாய்
தொடர்ந்து பரமன்றிற் பான் (13[23)

இவ்வுண்மை யாவும் உணர்ந்தோன் என்றுமே
இவ்வுலகில் வந்துபிற வான் (13[24)

ஆன்மாவை யோகஞா னம் தியா னத்தாலும்
ஆன்றகர்மத் தாலுணர லாம் (13[25)

இவ்வழி தேரார், முனிவோர் இயம்பிய
எவ்வழி நிற்பதும் நன்று. (13[26)

இயங்கு வதுங்கொல் இயங்காத தும்கொல்
இயற்கையுடன் சக்திசேர்ந் தால். (13[27)

உயிர்தோறும் ஓரளவாய் எஞ்ஞான்றும் நின்று
பயின்றாலும் கேடறியா ஒன்று (13[28)

அதனைப் பரம்பொருள் என்றே அறிந்தோனே
அதனை உணர்ந்தோனா வான் (13[28)

இறைவன் சமமாய் எதிலுமுளான் என்னும்
நிறைமனம் தந்திடும் பேறு (13[29)

எத்தொழில் செய்வதும் என்றும் இயற்கையே
அத்திறன்ஆன் மாவிற் கிலை (13[30)

ஒன்றில் பொருட்கள் அனைத்துமே ஒன்றுவதை
நன்குணர்ந்தோர் பிர்ம்மமா வர் (13[31)

ஆதியான் அந்தமிலான் மற்றும் குணமுமிலான்
எதிலும் பற்றுமி லான் (13[32)

எங்கும் நிறைந்துள்ள ஆகாயம் எள்ளளவும்
இங்கெதையும் பற்றாமை போன்று (13[13)

உடம்பெங்கும் ஆன்மா வியாபித்திருந்தும்
திடமாய்ப்பற் றாதெனக் கொள். (13[33)

எல்லொளிபா ரெல்லாம் விளக்குதல்போல்
ஈசனொளி
நல்லறிவை நல்கிவிளக் கும். (13[34)

ஞானத்தால் இத்தகை வேற்றுமை
நன்குணர்ந்தோர்
ஊனமில் பிர்மமடை வர் (13[35)

(தொடர்ந்து வரும்)




## ஸ்ரீமுக ஆண்டே வருக

**புலவரேறு ஆர்க்காடு ஆ. ஜெ. இராமசாமி**

வருக வருக சிறப்புடன் ஸ்ரீமுக ஆண்டெனும்
செழும் பொற்காரிகையே!
வந்த நின்வரவு நல்வரவாகுக நலம்பல ஓங்குக.
நலமாய் வாழ்க வாழ்க.
மாமழை பொழிக மாநிலம் செழிக்க
எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க வாழ்க!

பருதிமால் வருகையை கண்டதும் பங்கயம்
பாங்குற மகிழ்ந்து மிளிர்வது போல்
திருமுகம் மலர்ந்திவண் வருதிரு சிரிமுக
திப்பிய ஆண்டெனும் நங்காய்! பன்
னிரு அருஞ்சித்திரை முதலாம் எழில்மிகு
வனிதையர் வரிசையாய் வரவேற்க
பெரும்பா ரதத்துடன் பீடுடைத் தமிழகம்
பெரும்பே றுற்றிடப் போந்தருளே (2)

நீர்வளம் நிலவளம் குடிவளம் செழித்து
நேர்மையாய் அனைவரும் வதிந்திடவும்
சீர்தரு கலைவளம் தொழில்வளம் சிறந்தே
செப்புயர் பார்வளமோங்கிடவும்
ஓர்பெரும் பாரதம் உயர்மலை கடல்வளம்
ஓங்கியிங் குயர்ந்திட உன்னுகவே
சீர்கெழு ஸ்ரீமுக ஆண்டெனும் செல்வியே!
ஜெயமுர சொலித்திடச் செய்தருளே!

# நமநாட்டுச் சித்தர்கள்

டாக்டர் இரா மாணிக்கவாசகம்

## 4. இடைக்காடர்

இரு இடையரிடையே நடக்கும் உரையாடல் போல இவர் தம் பாடல்களைப் பாடியுள்ளார். உரையாடும் இருவர் பெயரையும் தாண்டவக்கோன், நாராயணக்கோன் எனக் குறிக்கின்றார்.

''சாவா திருந்திடப் பால்கற-சிரம்
  தன்னி லிருந்திடும் பால்கற
வேவா திருந்திடப் பால்கற-வெறு
  வெட்ட வெளிக்குள்ளே பால்கற'

எனவும்,

'எங்கும் நிறைபொருளைப்-பசுவே
  எண்ணிப் பணிவாயேல்
தங்கும் பரகதியில்-பசுவே
  சந்ததஞ் சாருவையே'

எனவும்

'மனமென்னும் மாடடங்கிற் தாண்டவக்
            கோனே - முத்தி
வாய்த்ததென் றெண்ணேடா
            தாண்டவக்கோனே'

எனவும், பால் கறத்தல், பசுவை விளித்தல், கோனாரை விளித்தல் முதலிய இடையர் தொடர்பான கருத்துக்கள் அடங்கிய பாடல்களைப் பாடியதால் இப்பெயர் பெற்றிருக்கலாம் எனவும் எண்ண வேண்டியுள்ளது. திருவண்ணாமலையில் இடையர் குடியில் தோன்றியவராதலின் இப்பெயர் பெற்றார் என்றும் கூறுவர்.

இவர் தொண்டைமண்டலத்தில் இடையன் வீட்டிலிருந்த இடையர் என்பர் சிலர்.

மலையாள நாட்டிலுள்ள இடைக்காடு என்னும் ஊரினராகவும் இருக்கலாம் என்பர். அன்றியும் இடைக்கழி நாட்டில் பிறந்தவர் என்ற கருத்தும் நிலவுகின்றது.

இவர் மகா விஷ்ணுவின் அவதாரம் என்ற கருத்தும் உள்ளது.

சைவ சமய நாயன்மார்களில் ஒருவராகிய ஆனாய நாயனாரே இடைக்காட்டுச் சித்தர் என்ற பெயரோடு விளங்கினார் என்றும் எண்ண வாய்ப்புண்டு.

அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை, புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் காணப்படும் பாடல்களைப் பாடிய இடைக்காடரின் இவர் வேறானவர் என்பது சித்தராக விளங்கிய இடைக்காடரின் பாடல்களோடு ஒப்ப வைத்துப் பார்க்கும்போது விளங்கும்.

மக்களில் சிறப்போடும், சீரோடும்வாழ்ந்த (அறிஞர்கள், அடியார்கள், சான்றோர்கள் முதலியோர் பெயர்களை இன்றும் பிள்ளைகளுக்குச் சூட்டி வருகிறோம். இம்முறை பண்டும் இருந்திருத்தல் வேண்டும். ஆகவே தான் சங்க கால அகத்தியர், பரணர், கபிலர், ஔவையார், முதலியோர் பெயர்களைப் பின் வந்த சித்தர்கள்) வர்கள் பெற்றிருந்தார்கள். இடைக்காடரும் இம்முறையில் பெயர் பெற்றவரே. எனவே இவ்விரண்டு வேறுபட்ட இயல்புடைய சான்றோர்களையும் ஒன்று எனமயங்கி விடுகிறோம்.

ஊசிமுறி, அறுபது வருஷப் பலன் என்பன இவர் செய்த நூல்கள். ஞானம் பற்றித் தம் பெயரால் ஒரு நூல் செய்துள்ளதாகத் தெரிகிறது. சாரீரம் என்னும் பெயரில் ஒரு வைத்திய நூல் இவர் பெயரில் காணப்படுகிறது. இவை தவிர சித்தர் ஞானக்கோவையில் சுமார் 140 பாடல்கள் காணப்படுகின்றன.

இவர் பொதிகை மலைச்சாரலில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கையில் ஞானியர் ஒருவர் வந்து பால் கேட்க அவருக்குப் பால் முதலியன கொடுத்து உபசரித்ததினால் அவர் ஞான உபதேசம் செய்து போயினார். அதனால் சித்தியடைந்து சித்தரானார். ஒருமுறை மழையில்லாது நாடு 12 ஆண்டு வற்கடம் ஆகும் என முன்னறிந்து இவர் தம் ஆடுகளுக்கு எருக்கிலை முதலியன கொடுத்துப் பழகி, குருவரகு என்னும் தானியத்தைச் சேறோடு கலக்கிச் சுவர் வைத்துக் குடிசையொன்று கட்டி அதில் தம் ஆடுகள் எருக்கிலை தின்னும் ஊறலால் சுவரில் தேய்க்க உதிர்ந்த சிறிதுதானியத்தைப் புசித்து வாழ்ந்து வந்தனர். நாடு வற்கடமாய் உயிர்கள் எல்லாம் அழிய இவரும் இவர் ஆடுகள் மாத்திரம் பிழைத்திருப்பதை அறிந்த நவகிரகங்களும் இவரிடத்து வந்தனர். சித்தர் எதிர்கொண்டு உபசரித்து விருந்தினர்க்கு ஆட்டின் பாலில் குருவரகைப் பாகஞ்செய்து இட கிரகத்தேவர்கள் புசித்து மயக்கத்தி லுறங்கினர். அந்தச் சமயத்தில் சித்தர் ஒன்றுடன் ஒன்று மாறு கொண்டு உலகத்தை வருத்திய கிரகங்களை மழை பெய்வதற்கு வேண்டிய படி மாற்றியிருத்தினார். உடனே நல்ல மழை பெய்தது. கிரகத்தேவர்கள் விழித்ததும் நிலையுணர்ந்தனர்.

இவர் போகரின் மாணாக்கர் என்ற கருத்தும், கொங்கணரின் மாணாக்கர் என்ற கருத்தும் நிலவுகின்றது.

மதுராபுரியில் குலேச பாண்டியன் என்பான் செங்கோல் ஓச்சி அரசு செலுத்திக்கொண்டிருந்தது மாத்திரமன்றிச் சர்வகலா வித்துவனாய்த் தென்மதுரையில் அப்போதிருந்தசங்கப் புலவருடன் தானும் ஒருவராய் இருந்தான்.



இது செய்தி கேட்டிருந்த இடைக்காட அவ் வரசனிடம் வெகுமதி பெறும் அபிப்பிராயம் கொண்டவராய் அவன் மேற் சில பிரபந்தம் பாடி அச்சங்கப் புலவருள் ஒருவரான கபில ரோடு உறவுபூண்டு அவற்றை அரங்கேற்றப் போனபோது அவ்வரசனோ அவரைசன்மானம் பண்ணாது அலட்சியம் பண்ணினான். ஆதலால் அவர் உள்ளம் புழுங்கி அவ்வரசவை துறந்து வடமதுரைக் கோயிலிற் போயிருந்தனர். அரசன் செய்கையை மெச்சிக் கொள்ளாக் கபிலர் ஆதிய சங்கப் புலவரும் இவருடன் கூடி அவ்விடம் போயினராதலால் அரசன் தான் செய்தது தவறு என்றுணர்ந்து மற்றைய நாள் இவரிருக்கும் இடந்தேடிப் போய் இவரையும் இவருடன் போன மற்றைய புலவரையும் மிக வேண்டி அழைத்து வந்து இவர் பாடி வைத்த பிரபந்தம் கேட்டு அகமிக மகிழ்ந்து இவருக்கு வெகுமதியாகயானைகளோடுகுதிரை களையும் காணி பூமியோடு பொன்னையும் கொடுத்தான். திருவள்ளுவர் குறள் அரங் கேற்றம் செய்யச் சென்றபோது தாமும் உடன் சென்று, அது அரங்கேறிய பின் சங்கத்தார் அதன் மேற் சிறப்புப்பாயிரம் கூறக் கேட்டுத் தாமும்,

'கடுகைத்துளைத் தெழுகடலைப் புகட்டித்
குறுகத் தறித்த குறள்'

என்று அதன்மேல் புகழ்ந்து பாடினார். சங்கத் தார் கேட்ட வினாக்களுக்கெல்லாம் வள்ளுவர் சரியான உத்தரஞ்சொன்ன பின் அவர்கள் இவ ரிடம் சிலவற்றை வினவ இவர் எழுத்தாளர் முறியாக,

'ஆற்றங்கரை யினருகிருந்த மாமரத்திற்
காக்கையிருந்து கஃகஃகெனக் -காக்கைதனை
எய்யக்கோலில்லா மலிச்சிச்சென விருந்தான்
வையக் கோனார்தன் மகன்'

என்னும் வெண்பாவை எழுத்தொன்றா ஒலி யுடன் பாட, சங்கத்தார் வெட்கினார்கள் என்னும் குறிப்பு ஒரு நூலில் காணப் பெறு கின்றது.


## 5. இராமதேவர்

இவரே பின்னர் யாகோபு என்ற பெய ருடன் விளங்கியவர் எனத் தெரிகிறது.

'தானென்று சதுரகிரிதன்னில் முன்னந்
தானிருக்கும் போதுஎன்பேர் இராமதேவர்
நானென்று பேருபெற்று இருக்கும்போது
நாலுமலைச் சித்தர்களுங் கற்பங்கேட்டார்
கோனென்று அவர்களுக்கு மகிழ்வாகக்
குறிப்புட னே கற்பமாயிரமுஞ்சொன்னேன்
மானென்று அதைக்குறுக்கி முந்நூறு தான்
மகிழ்வாகச் சொல்லிவிட்டே னறியத்தானே.

'அறியவே அதீதமை நூறுசொன்னேன்
அதைத்தெளிவாய்த் தெரிவதற்கை
நூறுசொன்னேன்
தெரியவே ஞாலமெண்நூறு சொன்னேன்
சிறப்பாக குறிக்கிமுந் நூறுசொன்னேன்
பெரியசிவ யோகமிரு நூறுசொன்னேன்
பேரான சூஸ்திரமும் நூறு சொன்னேன்
உரியதொரு தண்ட கமே நூற்றிப்பத்தும்
உயர்வாகச் சொல்லிவிட்டேன்
கருவாய்த்தானே.

## சுகமும் துக்கமும்



காதுஎன்று மூக்குஎன்று கண்எஎன்று
காட்டிஎன் கண்எதிரே
மாதுஎன்று சொல்லி வரும் மாயை
தன்னை மறலிவிட்ட
தூதுஎன்று எண் ணாமல் சுகமென்று
நாடும் இத் துர்த் புத்தியை
ஏது என்று எடுத்துரைப்பேன் இறை
வாகச்சி ஏகம்பனே

—பட்டினத்தடிகள்

கருவாகப் பட்சணிதான் நூற்றுப்பத்தும்
கனிவாகச் கேசரியும் நூறுசொன்னேன்
உருவாக வைத்தியமெண் பத்துமூன்றும்
உண்மையுடன் சுத்திமுறை ஐம்பதுந்தான்
திருவாக யோகமைம் பதுவுஞ் சொன்னேன்
சிறப்பாக முப்பூமுப் பதுவுஞ்சோன்னேன்
தருவாகப் பரிபாஷை இருபத்தேழும்
சாற்றினேன் சித்தர்களுஞ் சரியென்றாரே'

சரியென்று சொன்னபின்பு ஞானந்தன்னை
சாற்றினேன் பதினாறில் சுருக்கமாகத்
தெரியவே குருசூஸ்திரம் பதினாறோடு
சீராக ஞானமதை பத்திற்சொன்னேன்
உரிமையுட னதைக்குறுக்கி ஐந்திற்
சொன்னேன்
ஊற்றிடுபூ சாவிதிதான் பத்திற் சொன்னேன்
பெரியதொரு சாஸ்திரத்தை கோர்வை
நூலாய்ப்
பேணியே பார்த்தோர்க்குச் சித்தியாமே'

சித்தியென்ற என்னூலைத்தெரிந்துகொண்டால்
சித்தனென்று சொல்வதற்குத்
தடை வேறுண்டோ?
பத்தியுடன் நூல்கள் சொல்லி மக்காதேசம்
பரிவாக வந்தவுடன் நபிமாரெல்லாம்
எத்திசையுந் தானறிய யாக்கோபென்று
எனக்குப் பேரிட்டுச் சுன்னத்தும் செய்தார்
புத்தியுடனங்கிருந்து வெகுநூல் சொல்லி
புகழாக அறுநூறுஞ் சொன்னேன்முற்றே'

'யாகோபு சுண்ணக் காண்டம் 600 என்னும் நூலின் இறுதியில் காணப்படும் ஐந்து பாடல்களே மேலே காட்டப் பெறுவன. இவற்றின் மூலம் இராமதேவர் என்ற பெயரோடு விளங்கியபோது அவர் இயற்றிய சில நூல்கள் பற்றி அறிய முடிகிறது.

'யாகோபு வைத்தியவாத சூத்திரம் 400' என்னும் நூலில் இவர் மக்கா சென்றதற்கான காரணத்தை, 397, 398. 399 பாடல்களின் மூலம் இவர் சதுரகிரியில் ஆசான் அகத்தியரோடு தங்கியிருக்கும்போது 'கயிலாசசட்டநாதர் தீட்சை இருநூறு என்னும் நூல் எழுதி ரிஷிகளுக்கெல்லாம் மன்னவராம் திருமூலரிடத்தில் கொடுக்க அதை அவர் கிழித்துப் போட, அந்த நூலை இவர் வாங்கி நின்றாராம் என்றும் அகத்தியர் உட்பட ரிஷிகள் எல்லோரும் ஏன் கிழித்தீர் என்று கேட்க, திருமூலர் பதில் ஏதும் கூறாமல் இருந்தார் என்றும், இவர் கேட்க, நீ கேட்க வேண்டாம் மேட்டினம் செய்யாதே நீ போபோ' என்று கோபித்துக் கொண்டார் என்றும், அதைக்கேட்ட பின்னரே இவர் மக்கா வந்தார் என்றும் அறிகிறோம்.

இவர் பிறப்பினாலேயே முகம்மதியர். எனவே இவர் காலம் கி.பி 14-ஆம் நூற்றாண்டுக்குப் பிறகு இருக்கலாம் என்ற கருத்தும் அறிஞர் மத்தியில் வழங்குகிறது.

சித்தர் ஞானக்கோவையில் 'இராமதேவர் பூஜாவிதி' என்ற பெயரில் 10 பாடல்கள்காணப் படுகின்றன. இவை மாந்திரீகம் பற்றியன என்பது குறிக்கத்தக்கது.

'சித்தான மூன்றெழுத்துச் செயலாஞ் சோதி
சீரியவை யுங்கிலியும் சவ்வுமாகி
முத்தான லட்சவுரு செபிக்கச் சித்தி
முற்றிடுமே யெதிரியென்ற பேய்கட்குந்தான்
வித்தான வித்தையடா முட்டும்பாரு
விரிவான முகக்கருவு மூன்றுகேளு;
சத்தான அதன்கருவும் சிலையில் வைத்துச்
சதுரான விதிவிவர மறியக்கேளே'

இது சான்று ஆகும்.

இவர் நாகப்பட்டினத்தில் வீற்றிருந்து சிவ பூசையில் சித்தரானார் என்ற கருத்தும் வழங்குகிறது.

•

தேரையரே இராமதேவர் என்ற பெயரோடு பின்னர் விளங்கினார் என்ற கருத்தும் காணப்படுகிறது.

(தொடர்ந்து வரும்)

# அக்கமாதேவியின் அருள் வரலாறு

**டாக்டர் சாந்தா ஞானதேசிகன்**
*தமிழ் விரிவுரையாளர், இராணிமேரிக் கல்லூரி, சென்னை-4.*

மகாதேவியக்காவின் பெருமையைச் சிவ சரணர்கள் பலர் பாராட்டியுள்ளனர். கர்நாடகத்தில் ஹரிஹரன் போன்ற கவிஞர்கள் இலக்கியமாகப் பாடிச் சிறப்பித்துள்ளனர். செய்யுள், கட்டுரை நாவல் என்ற வடிவங்களில் இன்றளவும் இவரது வரலாறு கூறப்பட்டு வருகின்றது.

மகாதேவியக்கா கி.பி. 1146-இல் சித்திரா பௌர்ணமியன்று பிறந்ததாகக் கூறுவர்.

பொதுவாக, புகழ் வாய்ந்தவர்கள், இறையருள் பெற்றஞானிகள் ஆகியோர் வரலாறுகளில் பல கதைகள் நுழைந்து விடுவது நம் நாட்டில் இயல்பாக உள்ளது. மகாதேவியக்காவின் வரலாறும் இதற்கு விதி விலக்கன்று. இவரது வரலாற்றிலும் பல வேறுபாடுகள் காணப்படுகின்றன. மகாதேவியக்கா ஓர் உருத்திரகணிகை என்றும், இறைவாக்கினால் பூவுலகில் வந்து பிறந்தார் என்றும் இறைவியின் அம்சமாகிய சத்துவகலை மடந்தையே மகாதேவி என்றும் ஹரிஹரனும் சாமரசனும் கூறுவர்.

மகாதேவியக்காவின் வரலாற்றை எழுதியவர்களுள் காலத்தால் தொன்மை வாய்ந்தவர்கள் ஹரிஹரன், சென்னபசவாங்கன், பால்குரிசு சோமநாதன், சாமரசன் ஆகிய புலவர்களாவர். சூனிய சம்பாதனையும் அவரது வரலாற்றை அறியத் துணை செய்கின்றது. பசவரின் அனுபவ மண்டபத்தில் மகாதேவியக்காவிற்கும் அல்லமர், பசவர் முதலிய சிவசரணர்களுக்கும் இடையே நிகழ்ந்த தத்துவ உரையாடலைச் சூனியசம்பாதனையால் அறிய இயலுகின்றது. ஹரிஹரனின் மகாதேவியக்காரகளை, சென்னபசவாங்கனின் மகாதேவியக்கா புராணம், பால்குரிசு சோமநாதனின் பண்டிதராக்ய சரித்திரம், சாமரசனின் பிரபுலிங்க லீலை ஆகியவற்றின் துணைகொண்டு மகாதேவியக்காவின் வரலாற்றைப் பின்வருமாறு கூறலாம்.

மகாதேவியககா கர்நாடக மாநிலம் ஷிமோகா மாவட்டத்தில் உள்ள உடுதடி என்ற ஊரில் பிறந்தனர். அவரது பெற்றோர் பெயர் நிர்மலன், சுமதி என்பதாகும்.

மகாதேவியக்காவின் பெற்றோர் தம் பெயருக்கேற்ப சிறந்த சிவசரணர்களாகவும் நற்பண்புடைய சான்றோர்களாகவும், செல்வர்களாகவும், மெய்ஞ்ஞானிகளாகவும் திகழ்ந்தனர். இத்தகைய பெற்றோருக்குப் பிறந்த மகாதேவியக்காவும் இளமைப் பருவத்திலிருந்தே இறையுணர்வும், மெய்யறிவும், பண்பு நலனும் வாய்க்கப் பெற்று, பேரழகுடன் வளர்ந்து வந்தார். சிறந்த குருவின் அருளும் பெற்று, கல்வியறிவும் வசன இலக்கிய புலமையும் கொண்டு விளங்கினார்.

இளமைத் திருமணத்திற்குப் புகழ் பெற்ற இந்திய நாட்டில் அந்நாளில் பதினாறு வயது வரை மகாதேவியக்கா திருமணமின்றி இருந்தார் என்பதே ஒரு வியக்கத்தக்க செய்தியாக உள்ளது.

மகாதேவியக்காவிற்குத் திருமணம் நடந்ததா இல்லையா என்பது பற்றிக் கன்னட அறிஞர்களிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. அவரது வரலாற்றை முதலில் எழுதிய ஹரிஹரகவியே அவரது திருமணம், இல்லற வாழ்க்கை ஆகியவற்றை முதலில் கூறியவர். புராண மரபை ஒட்டிக் கற்பனை கலந்து மகாதேவியக்காவின் வரலாற்றை எழுதியுள்ளார் ஹரிஹர கவி. அவர் கூறும் வரலாறு பின்வருமாறு அமைந்துள்ளது.

வீர சைவ மரபைச் சேர்ந்தவராகிய அக்கமாதேவி, தம்மை மணக்க விரும்பிய, சமணசமயத்தைச் சேர்ந்தவனாகிய கௌசிக வேந்தனிடம், தாம் மூன்று முறை மட்டுமே பிழை பொறுப்பார் எனவும், அவ்வாறு அரசன் மும்முறை அவர் கருத்திற்கு மாறாக நடப்பின் அவனை விட்டு நீங்குவார் என்றும் நிபந்தனை விதித்தார். அந்நிபந்தனைக்கு மன்னன் இசைய, திருமணம் நிகழ்ந்தது. ஆனால் அடியாராகிய ஜங்கம வழிபாடு, இலிங்க பூசை, குரு வழிபாடு ஆகிய மூன்றினையும் அக்காமாதேவி செய்ய வியலாது அரசனால் ஊறு நிகழ்ந்தபோது உடனே அக்கமாதேவி கூந்தலை அவிழ்த்துவிட்டுத் துறவியாகிப் புறப்பட்டுச் சென்றார். ஸ்ரீசைலம் சென்று சிவலிங்க ஐக்கிமானார்.

மகாதேவியக்காவின் திருமணம் நடை பெறவில்லையென்று முதன் முதலில் கூறிய கவிஞர் 15-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சாமரசனே ஆவான். சாமரசன் பாடியுள்ள பிரபுலிங்க லீலையில் மகாதேவியின் திருமணம் பற்றிப் பின்வருமாறு கூறப்படுகின்றது.

உலாவந்த கௌசிக மன்னன் மகாதேவி யைக் கண்டு மோகம் கொண்டான். தூதில் வல்ல மகளிரை அனுப்பி மகாதேவியின் பெற் றோருக்குத் தன் கருத்தைத் தெரிவிக்குமாறு கூறினான். பெற்றோர் தாங்கள் வீரசைவராத லால் தம் குல மகளை வேற்று மதத்தவருக்குத் திருமணம் செய்து கொடுக்கும் வழக்கமில்லை என்றனர். அம்மகளிர் மேலும் வற்புறுத்த, பெற்றோர் மகாதேவியையே கேட்குமாறு கூறினர். அம்மாதரும் அவ்வாறே மகாதேவி யிடம் சென்று கூற, அவர் அரசன் தம் விருப் பங்கள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டு மென்றும், தம் விருப்பம் நிறைவேறவில்லை யெனில் தாம் உடனே நீங்கிச் சென்று விடு வார் என்றும் இரு நிபந்தனைகளைக்கூறினார். அவ்வாறே கௌசிக மன்னனே வந்து, 'மகாதேவியின் விருப்பமின்றித் தன் அதிகார பலத்தால் தான் அவரை வலிந்து புல்லுவ தில்லை' என்று சத்தியம் செய்தான். அதற்கு மாறானால் அக்கணமே மகாதேவி அவனை விட்டு நீங்கிச் செல்வார் என்று கூறியதற்கும் இசைந்தான்.

மகாதேவி பல்லக்கிலேறி அரண்மனை சென்று ஒரு புறம் தங்கியிருந்தார். அவரது பேரழகில் மயங்கிய மன்னன் காமம் மிக, அவ ரிடம் சென்று தன் விருப்பத்தைக் கூறினான். அதற்கு மகாதேவி, 'நீங்கள் வாக்களித்தபடி முதலில் என் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும். சிவபக்தனாகிய பிறகு வந்து என்னைக் கூடுக' என்றார். சமண அரசனாகிய கௌசிகன் தான் சிவபூசை செய்ய இயலா தென்று கூறினான். அவ்வாறாயின் தம் நிபந் தனையின்படித் தாம் அவனை விட்டு நீங்குவ தாகக் கூறி மகாதேவி தம் ஆடை அணிகலன் களைக் களைந்து கூந்தலை அவிழ்த்து விட்டு அரண்மனை விட்டகன்றார்.

மேற்கூறப் பெற்ற வரலாறுகளால் மகாதேவியின் திருமணம் நடைபெற்றதா இலலையா என்பது பற்றிய கருத்து வேறுபாடு அக்காலத்திருந்தே கருநாடகத்தில் இருந்தமை புலனாகும். சாமரசனைப் பின்பற்றிப் பல கவிஞர்களும் மகாதேவியின் திருமணம் நடை பெறவில்லை என்றே கூறியுள்ளனர். ஆர்.சி. ஹிரேமத்,எம்.எஸ். வட்டே ஆகிய இரு பேரறி ஞர்களும் இக்கருத்தே ஏற்றுக் கொள்ளத் தக்கது என்று தம் நூல்களில் நிறுவியுள்ளனர்.

வீரசைவர்கள் ஒரு பாவியுடன் திருமணத் தொடர்பு கொள்வதென்பது அக்காலத்தில் நடக்கவியலாத ஒன்று. மகாதேவியின்இளமைப் பருவத்திலிருந்தே இலிங்கபதி சரணசதி என்ற பாவத்தில் நிலை பெற்றிருந்தவர். அவரது வசனங்களே இதற்கு சான்றாயமைகின்றன. திருமணம் ஆனதற்கான சான்றுகள் அவரது வசனங்களில் காணப்படவில்லை. எனவே திரு மணம் ஆகவில்லை என்று கொள்ளுவதே பொருந்தும் என்பது கன்னட அறிஞர்கள் முடிவாகும்.

இளமைப் பருவத்திலிருந்தே இறைஞான மும், ஆன்மீக நாட்டமும் கொண்டு, இலிங்க மாகிய பதியிடம் ஆழ்ந்த பக்தியையும், அள வற்ற பிரேமையையும் கொண்டிருந்த உள்ள உறுதி வாய்ந்த மகாதேவி, திருமணம் செய்து கொள்ளவில்லை என்பதைத் தம் நாவலாகிய தரங்கிணியில் அற்புதமாகப் படைத்துள்ளார் அருள்மிகு ஜகத்குரு மாதே மகாதேவியவர்கள்.

உடுதடியிலிருந்து புறப்பட்ட மகாதேவி ஸ்ரீசைலம் சென்றதாக ஹரிஹரன் குறிப்பிடு கின்றார். அங்கு கௌசிகன் மாறுவேடத்தில் வந்து மகாதேவியை வேண்டியதாகவும்,ஆனால் அவர் அவனைமறுத்து ஒதுக்கிசென்னமல்லிகார் சுனனின் தியானத்தில் மூழ்கியதாகவும் ஹரி ஹரன் கூறியுள்ளார். மகாதேவி கல்யாணநகர் சென்ற குறிப்பே ஹரிஹரனின் நூலில் கூறப் படவில்லை. இக்கருத்திற்கு மாறாகச் சாம ரசன் மகாதேவி உடுதடியிலிருந்து கல்யாண் நகரம் சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். சென்னபசவாங்கனின் மகாதேவியக்கா புராணமும் சூனிய சம்பாதனையும் இக்கருத் தைக் கூறியுள்ள அப்பகுதி வருமாறு:

கல்யாண் சென்றடைந்த மகாதேவியின் பற்றற்ற உள்ளத்தை எடுத்துக் காட்டுவதற் காகக் கின்னரி பொம்மையனை பசவர் அனுப்பி வைத்தார். கின்னரி பொம்மையனின் வினாக்களுக்கு விடையளித்த மகாதேவிதாம் எவ்வாறு காமத்தையும் உலகப் பற்றையும் வென்றார் என்பதை எடுத்துரைத்தார். பிறகு நகரினுள் சென்று பசவரின் புகழையும், அவர் வாழும் கல்யாண் நகரின் பெருமையும் வியந்து போற்றிக் கொண்டுசென்றார். பசவரின் சிவா நுபவ மண்டபத்திற்குச் சென்று அவரைக் கண்டு போற்றினார். பசவர் மகாதேவியின் இறையுணர்வையும் துறவு உள்ளத்தையும் சிவானுபவத்தையும் பெருமையையும் அல்லமப் பிரபுவிற்கு எடுத்துரைத்தார். பிரபு தேவரும் மகாதேவியும் அப்போது நடத்திய தத்துவ உரையாடல்கள் மகாதேவியாரின் தத்துவ ஞானத்திற்கு ஒப்பற்ற சான்றாகத் திகழ்கின் றது. அவையிலிருந்த சிவசரணர்கள் மகா தேவியைப் போற்றினர். தான் இலிங்க ஐக்கிய மாகுமிடம் எதுவென்று அல்லமரை மகாதேவி வினவ, அவர் ஸ்ரீசைலத்திலுள்ள கதலிவனம் செல்லுமாறு மகாதேவியிடம் கூறினார்.

மகாதேவியும் அல்லமர் உரைத்தபடியே ஸ்ரீசைலம் நோக்கிச் சென்றார். செல்லும் நெறியெல்லாம் சென்னமல்லிகார்ச்சுனன் புகழ் பாடி நடந்தார். கதலிவனத்தில் தம் அங்கை யில் இட்ட லிங்கத்தை வைத்து தியானம் செய்து இலிங்க ஐக்கியமானார். அவ்வாறு அவர் இலிங்க ஐக்கியமானதை ஞானதிருஷ்டி யால் உணர்ந்த பசவரும் மடிவாள மாச்சைய ரும் கற்பூரம் கனலில் கரைந்தது போல மகாதேவியும் இலிங்கத்துடன் ஒன்றினார் என்று கூறி வியந்து போற்றினர்.

மகாதேவியின் வசனங்களில் சில அவரது வாழ்க்கை வரலாற்றை அறிய உதவும் அகச் சான்றுகளாக விளங்குகின்றன.

''ஸ்ரீ குருலிங்கதேவன் தன் கரத்தை
என் சிரத்தின் மீது வைத்தபோது
பிறவி அழிந்தது; என்னைத்தன்
போலாக்கினான்
நானும் அவனும் பிரிவின்றி
இருப்பதெவ்வாறு எனக் காட்டினான்
காணாய்

என் கரதலத்திலுள்ள மகாலிங்கத்தை
என் கரதலத்தில் மூர்த்தியாக்கினான்
என் கரதலத்தில் இருக்கும் மகாலிங்கத்தை
என் மனத்தலத்தில மூர்த்தியாக்கினான்
என் மனத்தலத்தில் உள்ள மகாலிங்கத்தை
என் எண்ணத்தில் இருக்கும் மூர்த்தியாக்கினான்
என் எண்ணத்தில் இருக்கும் மகாலிங்கத்தை
என் ஜீவனுக்குள்ளே மூர்த்தியாக்கினான்
என் ஜீவனில் உள்ள மகாலிங்கத்தை
என் சர்வாங்கத்தில் பிரிவின்றிச் சேர்த்தான்
நம் ஸ்ரீகுருலிங்க தேவன் சென்ன
மல்லிகார்ச்சுனா!''

வீரசைவர்கள் சிலலிங்க பதி, 'சரணசதி' என்ற பாவனையைக் கடைப்பிடிப்பவர்கள். இப்பாவனையைக் கடைபிடித்து மகாதேவியக்காவும் சென்னமல்லிகார்ச்சுனனாகிய இலிங்கத்தின் மேல் தாம் கொண்டிருந்த பக்தியையும், பிரேமையையும் தம் வசனங்களில் புலப்படுத்தியுள்ளார். தம் கணவனாகிய சென்ன மல்லிகார்ச்சுனனின் வருகைக்காகப் பிரிவுத் துன்பத்தால் வாடி வருந்தும் ஏக்கமும், காதலும் அவரது வசனங்களில் நிறைந்துள்ளன.

'' என் கண்களின் முன்னால்
துலங்கும் தெய்வ ரூபனைக் கொண்டு
மெய்மறந்தேனம்மா
மணிமகுடமும் பணிகங்கணமும்
நகைமுகமும் கொண்ட
சுந்தரனைக் கண்டு
நெஞ்சைப் பறிகொடுத்தேனம்மா
இதனால் கேள் தாயே!
சென்ன மல்லிகார்ச்சுனரே என் மணவாளர்
நானே அவர் மணமகள்''

என்னும் வசனம் அவரது சிவப்பிரேமைக்குச் சிறந்த சான்றாகும்.

'' மரகதத்தரை கனகதோரணம் வைரத்தூண்
பவழச் சப்பரம் அமைத்து

என் திருமணத்தை நடத்தினர். என்னவர்கள்
என் திருமணத்தை நடத்தினர்
சென்ன மல்லிகார்ச்சுனன் என்னும் கணவனுக்கு
கங்கணக் கையில் தாரை வார்த்து
மங்கல அட்சதை தூவி
என்னை மணம் செய்து வைத்தனர். ''

என்று தமக்கும் சென்னமல்லிகார்ச்சுனனுக்கும் திருமணம் நடந்ததாகத் தாம் கண்ட கனவினை எடுத்துரைக்கின்றார் மகாதேவி.

'' பகலில் நான்கு யாமங்களிலும்
நான் உனக்காகத் தவிக்கிறேன்
இரவின் நான்கு யாமங்களிலும்
நான் உனக்காக ஏங்குகிறேன்
இரவும் பகலும் உனக்காக ஏங்கி
மெய்ம் மறக்கிறேன்
சென்ன மல்லிகார்ச்சுனய்யா
உன்னிடம் வைத்த அன்பால்
உணவும் தாகமும் உறக்கமும்
மறந்தேனய்யா!''

என்னும் வசனத்தில் சென்னமல்லிகார்ச்சுனனிடம் அவர் கொண்ட காதல் ஏக்கத்தின் ஆழத்தையும் அருமையையும் உணரலாம்.

இக்காலத்தில் அறிவியல் வளர்ச்சியால் போக்குவரத்து வசதிகள் பெருகியுள்ளன. மின் விளக்குகள் இரவைப் பகலாக ஒளியூட்டுகின்றன. சாலை வசதிகள் ஊர்களை இணைக்கின்றன. ஆனால் இவ்வசதிகள் இல்லாத அக்காலத்தில் காடுகளும், வனங்களும் செழித்திருந்த காலகட்டத்தில் விலங்குகளும் காபாவிதர்களும் பைரவர்களும் சுற்றித் திரிந்த அச்சம் தரத்தக்க சூழலில் திகம்பரியாக, தன்னந்தனியாக உடுதடியிலிருந்து கல்யாணத்திற்கும், அங்கிருந்து ஸ்ரீசைலத்திற்கும் சென்றார் மகாதேவியக்கா என்பதே ஒரு வியத்தற்குரிய செய்தியாக உள்ளது. மகாதேவியின் அஞ்சாமை ஆச்சரியப்படத்தக்கது. அவ்வாறு சென்றபோது சிலகாமுகர் அவரை நெருங்கியிருக்கக் கூடும். அவர்களுக்கு அழகு நிலையாமை, இளமை நிலையாமை ஆகியவற்றை மகாதேவி எடுத்துரைத்ததை அவரது பின்வரும் வசனத்தால் அறிய முடிகின்றது.

''என் அழகியமுலையும் மலரும் யௌவனமும்
காண்பதற்கு வந்தீரண்ணா
அண்ணா நான் பெண்ணல்ல!
அண்ணா! நான் கணிகையல்ல!
அண்ணா! பின் ஏன் என்னைக் கண்டு கண்டு
யாரென்று கேட்டு வந்தீரண்ணா!
சென்ன மல்லிகார்ச்சுனனைத் தவிர
வேறொரு புருஷனின் முகமும்
எனக்குப் பிடிக்காது பாரண்ணா!

கல்யாண் நகரில் பசவரின் அனுபவ மண்டபத்தில் பசவர் முதலிய சிவசரணர்கள் பெருமையை வியந்து மகாதேவி போற்றியதைப் பின்வரும் வசனத்தால் அறியலாம்:

'' பசவண்ணனின் பக்தி
சென்னபசவண்ணனின் ஞானம்
மடிவாளய்யனின் நிஷ்டை
பிரபுதேவரின் ஜங்கமஸ்தலம்
அஜகண்ணனின் அஜாதஸ்தலம்
திஜகுணனின் ஆருதஸ்தலம்
சித்தராமய்யனின் சமாதி நிலை
இவர்கள் அனைவரின் கருணையும்
எனக்குப் பிரசாதமாயின சென்ன
மல்லிகார்ச்சுனா! ''

அனுபவ மண்டபத்தில் சிவசரணர்களிடம். மகாதேவி தாம் காமத்தையும் ஆசையையும் அறவே வென்ற நிலையினைப் பின்வருமாறு கூறுகின்றார்.

''இலிங்கம் மூலமாக உடலின் குறைகளை
கெலித்தேன்
அறிவின் மூலமாக மனதின் குறைகளை
வென்றேன்
சிவானுபவத்தின் மூலமாக ஆன்மாவின்
குறைகளை ஜெயித்தேன்
கரணங்களின் இருளை விளக்கை உடையாகக்
கொண்டு ஜெயித்தேன்
யௌவனத்தின் புற எழிலில்
காமனைச் சுட்டெரித்த பஸ்பமாக நான்
திருநீற்றைப் பூசியிருப்பதை உன் கண்ணால்
பாரய்யா
என் தேவன் சென்னமல்லிகார்ச்சுனன்
காமனைக் கொன்று அனங்கனாகப்
படைத்தானே
அந்த மானசீகனின் தலையெழுத்தைத்
துடைத்தேன் ''

கல்யாணிலிருந்து கதலிவனம் சென்று வியந்து போற்றினார் மகாதேவி.

''வனமெல்லாம் கல்பதரு
ஒவ்வொரு மரமும் உயிர்தரும் மரம்
கற்களெல்லாம் ரசவாதம் செய்வன
நிலமெல்லாம் புனித முத்தித்தலம்
நீரெல்லாம் மூப்பெய்தாத அமிர்தம்
விலங்குகளெல்லாம் புருஷ மிருகங்கள்
இடறுகின்ற கற்களெல்லாம் சிந்தாமணி
சென்னமல்லிகார்சுனனுக்கு உவப்பான கிரியைச்
சுற்றிப் பார்த்து வந்து
கதலிவனத்தைக் கண்டேன் நான்.''

மேற்கூறப் பெற்ற செய்திகளால் மகாதேவி யக்காவின் வரலாற்றைப் பின்வருமாறு சுருக்கமாகக் கூறலாம்.

மகாதேவி உடுதடி என்ற கிராமத்தில் பிறந்தார். இவ்வூர் சிறந்த சிவத்தலமாக விளங்கியது. பெற்றோர் நிர்மலன், சுமதி ஆவர். இவர்கள் சிறந்த சிவசரணர்களாகவும், சீலம் ஒழுக்கம், ஞானம் முதலிய பண்புகள் நிரம்பப் பெற்றவராகவும் விளங்கினர். இத்தகைய பெற்றோருக்கு அருமை மகளாகப் பிறந்த மகாதேவி சிறப்பாக வளர்ந்து, தக்க பருவத்தில், தக்க குருவிடம் தீட்சை பெற்றார். சிவனுக்கே தம்மை அர்ப்பணித்த சிவசரணியாக விளங்கினார். இளமைப் பருவத்திலிருந்தே இறை ஞானமும் மெய்யுணர்வும், தத்துவப் புலமையும் கல்வி நலமும், படைப்பாற்றலும் அஞ்சாமையும், சிவப்பிரேமையும் நிரம்பப் பெற்றிருந்தார். அரசனை மணந்து சுக போகத்தில் திளைக்கும் வாய்ப்பு அவரைத்தேடி வந்தபோதும் அதனை மதிக்காது விட்டு நீங்கினார். திகம்பரியாகச் சென்றார். பசவரின் அனுபவ மண்டபத்தில் தம் தத்துவ ஞானத்தை புலப்படுத்தினார்.

வயதில் சிறியவரானாலும் ஆன்ம ஞானத்தில் மகாதேவி சிறந்தவர் என்றும், பெயரில் பெண்ணாயினும் பாவத்தில் அவர் ஆண் என்றும் பசவரின் அனுபவ மண்டபத்திலிருந்த சிவசரணர்கள் அவரைப்போற்றிப் புகழ்ந்தனர். 'அக்கா'. என்றழைத்து மகிழ்ந்தனர். அங்கு அல்லமரின் அருள் பெற்ற மகாதேவியக்கா அவரது சொற்படி ஸ்ரீசைலத்திலுள்ள கதலி வனம் சென்று இட்டலிங்கத்தின் மீது நாட்டத்தைச் செலுத்தி இலிங்க ஐக்கியமானார்.

மகாதேவியக்காவின் வாழ்க்கை அன்பும், பண்பும், தத்துவமும், ஞானமும், வைராக்கியமும், அஞ்சாமையும் மனத்தூய்மையும் நிறைந்தது. பெண்கள் அபலைகளல்லர். அவர்களும் ஆண்களைப் போன்றே துறவு பூண்டு இறைவனை நாடலாம். முக்தியடையலாம் என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டியவர் அவர். பெண் குலமே அக்காவினால் பெருமை அடைந்துள்ளது எனலாம்.

''நாளை வருவது நமக்கிப்போதே வரட்டும்
இன்று வருவது நமக்கிப்போதே வரட்டும்
இப்போது அப்போது என்னாதீர்
சென்னமல்லிகார்ச்சுனா! ''

என்று உலகத்தவர்க்கு உரைக்கின்றார் மகாதேவி அக்கா.

தம் வசனங்களாலும், பதங்களாலும் கன்னட இலக்கியத்திற்கு வளமும் பெருமையும் சேர்த்தவர் மகாதேவியக்கா. யோகாங்க திரிவிதியும் சிருஷ்டி பற்றிய வசனமும் அவரது வீரசைவ தத்துவஞானத்தை உலகுக்குப் பறைசாற்றுகின்றன. பெண்ணுயர்வு, பெண்ணுரிமை பெண் ஆன்மீகம் என்ற மூன்று சாதனைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார் மகாதேவியக்கா என்று கன்னட நாட்டு அறிஞர்கள் அவரைப் போற்றுகின்றனர். 'அக்கா நமக்கு ஒளிதரும் சக்கரவர்த்தினி; சுதந்திர ஜோதி, யோகினி, விராகினி, கலாவிலாசினி, வித்யாவிநோதினி. அவருக்கு இணை அவரே' என்று போற்றுகின்றனர். தம் படைப்புகளின் கவிதை நயத்தால். மகாதேவி அக்கா கன்னட இலக்கியத்தில் சிறப்பிடத்தையும், கன்னடப் பெண் கவிஞர்களுள் தலைமையிடத்தையும் பெறுகின்றார் என்று புகழ்கின்றனர். அவரது ஆத்மசுய ஒளியினை அவரது வசனங்களில் காண முடிகின்றது.

''அட்சயபாத்திரம் போன்ற அக்கமாதேவியின் வசனங்கள் புத்தியும், இதயமும்: அறிவும் உணர்ச்சியும் சேர்ந்த கவிதைகள், குறிக்கோளும், அதை அடையும் நெறியும் அவரது வசனங்களில் கூறப்பட்டுள்ளன. நல் ஞானம், நற்செயல் நல்லொழுக்கம் என்ற மூன்றும் சேர்ந்த சன்மார்க்கத்தைத் தம் வசனங்களில் காட்டிய அமரஜோதி அக்கா இலக்கிய உலகின் சுயஞ்ஜோதி பெண்ணுலகின் கௌரவ ஜோதி' என்று புகழப்படுகின்றார்.


அக்காவின் பதங்கள் கிராமிய இலக்கிய வகையில் தத்துவ ஞானம் அமையப் பாடப் பெற்ற புதிய இலக்கிய வகைக்கு வழிகாட்டியாக விளங்குகின்றன.

அருள்மிகு

# பாலசுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

## திருப்பணிக்குழு

## வட சென்னிமலை, (சேலம் மாவட்டம்)



புதுப்பிக்கப்படவிருக்கும் மலைக்கோயிலின் மாதிரித் தோற்றம்

| | | | |
|---|---|---|---|
| உருவாய் | அருவாய் | உளதாய் | இலதாய் |
| மருவாய் | மலராய் | மணியாய் | ஒளியாய்க் |
| கருவாய் | உயிராய்க் | கதியாய் | விதியாய்க் |
| குருவாய் | வருவாய் | அருள்வாய் | குகனே |

# திருப்பணி வேண்டுகோள்!

அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில் திருப்பணி குழுவினரால் நுழைவு வாயில் ஒன்றும் மலைக்கோயிலில் 3 அடுக்கு விமானங்கள் இரண்டு, 16 கால் மண்டபம், 7 நிலை ராஜ கோபுரம், மலைமேல் மதில்சுவர், கருங்கல் தளவரிசை ஆகிய திருப்பணிகள் சுமார் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருப்பணி வேலைகள் துவக்கப்பட்டுள்ளதால் மெய்யன்பர்கள் 'செயலாளர், பொருளாளர், திருப்பணி குழு, அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோயில், வட சென்னிமலை, சேலம் மாவட்டம்' என்ற பெயரில் காசோலையாகவோ, பணமாகவோ, தாராளமாக நிதி கொடுத்துதவும் படியும், நன்கொடையாளர் திட்டத்தின் கீழ் மேற்காணும் வேலைகளில் தாங்கள் விரும்பும் திருப்பணியை தங்களது மேற்பார்வையில் நேரடியாகவோ செய்து தரும்படியும் அன்புடன் வேண்டி மேற்காணும் திருப்பணிகள் விரைவில் நிறைவேற்றி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி அருளுக்குப் பாத்திரமாகுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

இங்ஙனம்

**கூட்டுரோடு N. ராமசாமி, M.A.,**
தலைவர், திருப்பணிக் குழு

**D. S. பெரியசாமி, B.Sc., B.L.**
கோட்டவன அலுவலர் (ஓய்வு)
தலைவர், சஷ்டி குழு

**L. மாரியப்பன், B.A.**
நிர்வாக அதிகாரி
செயலாளர் & பொருளாளர், மற்றும்
திருப்பணிக் குழு
உறுப்பினர்கள்

**K. K. ராஜகோபாலன்,**
உரிமை சாரதா டிரான்ஸ்போர்ட்
உபதலைவர் திருப்பணி குழு

**S. நடராஜன், L.M.E.**
உரிமை அருட்ஜோதி டிரான்ஸ்போர்ட்
செயலாளர், சஷ்டி குழு

---

குறிப்பு : திருப்பணிக்கு நன்கொடை வழங்குபவர்கள் அலுவலகத்தில் செலுத்தி அச்சு ரசீது பெற்று கொள்ளவும்.

# மாமனும் மாமியும் நீ

**பேராசிரியர் திருமதி சுமதி குமாரசுவாமி**
**மருத்துவக்கல்வி துணை இயக்குநர், (செவிலியல்) மருத்துவக் கல்வி இயக்ககம்,**
**சேப்பாக்கம். சென்னை-600 005.**

திருச்சிற்றம்பலம்

''அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ
அன்புடைய மாமனும் மாமியும் நீ

—அப்பர் தேவாரம்

பரஞ்சோதி முனிவர் திருமறைக்காடு என்னும் சிவத்தலத்தில் இன்றைக்கு ஏறக்குறைய 800 ஆண்டுகளுக்கு முன்பு, சைவ வேளாளர் மரபில் தோன்றி, சிவன்பால் அன்பு கொண்டவராக துறவறத்தில் விருப்பமுற்று, பற்பல தலங்களை தரிசித்து வருகையில், ஒரு சமயம் திருவாலவாயிலில் தங்கியிருந்தார். அது சமயம் மதுரையம்பதியில் எழுந்தருளியிருக்கும் மீனாட்சி அம்மை அவரது கனவில் தோன்றி 'குழந்தாய்! எம்மோடு கூடிய அழகரது திருவிளையாடல்களை டாடு'என்று திருவாய் மலர்ந்தருள, பரஞ்சோதி முனிவரும் அவ்வண்ணமே உமையோடு கூடிய அழகன் என்னும் பொருளைத் தரும் சோமசுந்தரக் கடவுளது திருவிளையாடல்களைப் பாங்குற பாடி முடித்து, அரங்கேற்றினார்.

சேக்கிழார் சுவாமிகள் பாடிய பெரிய புராணமும், பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடல் புராணமும், சைவத்திற்கு இரு கண்களாகும். நாம் இப்பொழுது திருவிளையாடற்புராணத்தில் முப்பத்தொன்பதாவது படலமான 'மாமனாக வந்து வழக்குரைத்த படலத்தில் அமைந்துள்ள பாடல்களின் இலக்கிய நயத்தைப் பார்ப்போம்.

''கன்னிநான் மாடக்கூடற்கடிநகர் வணிகமாக்க
தன்னின் மாநிதிக் கோனன்னான்
தனபதியென்னும் பேரான்
மன்னினானனையான் கற்பின்மட வரல்
சுசீலையென்பாள்
பொன்னினாண்முளரிச்சேக்கைப்
புண்ணியத்திருவினன்னாள்''

நான்மாடற்கூடல் எனப்படும் மதுரை திருநகரத்தில் வைசியர் குலத்திலே தோன்றியவர் தனபதி என்னும் செட்டியாகும். அவரது மனைவி சுசீலை என்பவரும்வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு நெடுங்காலம் புத்திரப்பேறு இல்லை.

''எனவிவர் தமக்குமைந்தற்பேறின்றியிரங்கு
நாளிற்
தனபதி மருமன்றன்னைத் தகவுசால்
மகவாக்கொண்டு
மனமகிழ் சிறப்பானல் மனைவியுந்தொழுது
வாங்கிப்
புனைவனபுனைந்து போற்றிப் பொலிவுற
வளர்த்துக் கொண்டாள்''

தனபதியும் சுசீலையும் தனது மருமகனை தனது புத்திரனாகப்பெற்று அன்போடு வளர்த்னர். எனினும் தன் மனைவி மேல் வைத்த ஆசை மயக்கத்தால், தனபதி செட்டியார் தன் தங்கையோடு தீராச்சண்டையிட்டுக்கொண்டு இருந்தார். இதைப் பொறாத தங்கையும் கோபம் கொண்டு, உனக்கு புத்திரப் பேறில்லை. என் மகனால் அல்லவோ பெருமை என்று கூறினாள்.

'பெருமிதமுனக்கேன் பிள்ளைப்
பேறற்றபாவிநீயென்
அருமைநன் மகனால்அன்றோ இருமையுமடை
வாயென்னப்
பெரிது நாணடைந்து மேலைக்காயினும்
பிள்ளைப்பேறு
தருதவம்புரிவேனென்னாத்தனபதி
தவமேற்செல்வான்'

உடன் தனபதி தனது தவற்றை எண்ணிவருந்தி தனது சொத்தை தனது மருமகனுக்கு எழுதி வைத்து தனபதியும் சுசீலையும் இனிவரும் பிறவிக்காவது புத்திரபேறு வேண்டுமென தவம் புரியச் சென்று விட்டனர். தனபதி சென்றபின் அவர் வர காலம் தாழ்த்தமையால் அவரது தாயத்தார்கள் தனபதி மருமகனுக்கு கொடுத்த வீடு, விளைநிலம், ஆபரணம், திரவியம் ஆகியவற்றை வல்வழக்கு பேசிக் கவர்ந்து கொண்டனர்.

''ஒருத்திநானொருத்திக்கிந்தவொரு மகன்
இவனுந்தேறுங்
கருத்திலாச்சிறியன் வேறுகளைகணுங்
காணேன் வய
வருத்தி சாலறவோர் தேறுமருட்
பெருங்கடலேயெங்கு
மிருத்திநீயறியாய் கொல்லோவென்றுபார்படிய
வீழ்ந்தாள்''

தனபதியின் தங்கை மனம் வருந்தி, தனது மகனோடு கோயிலுக்குச் சென்று, ''இறைவா! எனக்கு யாரும் இல்லை. எங்கும் நிறைந்திருக்கும் நீர் இவையெல்லாம் அறியீரோ? திக்கற்றவர்களுக்கு தெய்வந்துணை என்பார்கள்' என்று தரையில் விழுந்து அழுது புலம்பினாள். அயர்வின் காரணமாக அங்கேயே படுத்து உறங்கி விட்டாள். இறைவன் அவளது கனவில் ஒரு

பிராமணராகத் தோன்றி, 'பெண்ணே நீ தாயத்தார்களை மறித்து தருமசபைக்கு வருவித்து கொண்டுவா. நாம் வந்து வழக்கு தீர்த்துத் தருவோம் போ'' என்றார்.

''திக்கற்றவருக்குத் தெய்வந் துணை''

என்னே! நமது இறைவனின் அன்பு. இறைவன் கூறியதாக பரஞ்சோதி முனிவர் கீழ்க்கண்ட பாடல்களில் கூறியதை படிக்கும்பொழுது இறைவனின் அன்பும் அதே சமயம் தனபதியின் தங்கை செய்த பாக்கியமும், நம் கண்முன்வந்து நமது கண்களில் கண்ணீர் பெருக்குகின்றது.

''மாறுகொள்வழக்குத் தீர்க்க
வல்லவருளினாலே
சீறுகொள்வடிவேற்கண்ணாள் சிறுதுயிலடைந்
தாள் மெய்யில்
ஊறுகொள்கரணமைந்து முற்றறிகனவிற்
கங்கை
யாறுகொள் சடையார் வேதச்செல்வராயடுத்
துச் சொல்வார்.''

''புலர்ந்த பின் தாயத்தோரைப்புரவலன்
ஆணையாற்றால்
வருந்தலமன்றத்தேற்றிம நித்தலைய
யிருத்தியாம் போந்
தலந்தருமறிவான் மூத்தோரனைவருமிசைய
வந்துஅச்
சலந்தருவழக்குத் தீர்த்துத் தருகுவம்
போதியெனறார்''

தனபதியின் தங்கையும் விழித்து எழுந்து இறைவனை தியானித்து வீட்டிற்கு சென்றாள். பிறகு காலை திருக்கோயிலுக்கு வந்து இறைவனை வணங்கி, தாயத்தார் வீட்டிற்குச் சென்று பலரும் கேட்க, அவனது மகனின் சொத்தை திருப்பித்தரக் கேட்க அவர்கள் அவளையும், மகனையும் வைது தள்ளி அடித்தனர்.

தனபதியின் தங்கை பிறகு தருமசபைக்கு சென்று தனது வழக்கை எடுத்துரைத்து''இது முறையோ! முறையோ!'' என்று புலம்ப, அவர்களும் ஏவலாளர்களை அனுப்பி, தாயத்தார்களை அழைத்து வந்தனர்.

அப்பொழுது சிவபெருமான் தனபதிபோல் வேடங்கொண்டு அவைக்கு எழுந்தருளினார்.

''பெருவிலைக்குண்டலம் பிடரிற்பத்திபாய்ந்
தெரிகதிர் கவிழ்ப்பவாளெறிக்கு மங்கத
மருவரைத் தோள்கிடந் திமைப்பவாக மேற்
குருமணிக்கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே'

''முரலளிபுறவிதழ் மொய்ப்பச் செய்யதா
மரைசிறி தலர்ந்தென மணிசெய்மோதிரக்
கரதலம் வீசியோர் கடுங்களேறெனப்
பெருமிதநடைகொடு நடக்கும்பெற்றியார்''

''வாடியமுளரிபோன் மாறிட்டாறிடத்
தூடியுமலர்ந்த போதொப்பமைந்தன்மே
னாடிய தண்ணளிநயந்து முட்கிடை
கூடிய முகத்தினர் குறுகுவாரவை.''

தனபதி போலத் திருவுருக்கொண்டு சிவபெருமான் திருச்செவிகளில் இரத்தினகுண்டலங்களும், திருப்புயங்களில் தோளணிகளும், திருமார்பிலே கண்டிகையும் பிரகாசிக்க, மோதிரம் இட்ட திருக்கரத்தை வீசி சிங்கம் போல் பெருமிதத்தோடு நடந்து வந்தார்,

'அரசனிங்கில்லை கொல்லோ ஆன்றவரில்லை
கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல் கோடியதோ
கோதினூல்கள்
உரைசெயுந்தெய்வந்தானுமில்லை
கொல்உறுதியான
தருமமெங்கொளித்ததே கொல் என்று
அறத்தவிசிற் சார்வார்.',

அரசனிங்கில்லையோ, பெரியோர்கள் இல்லையோ, அரசன செங்கோல் கொடுங்கோலாயிற்றோ, கருமம் ஒழிந்ததோ என்று கூறி தரும சபையை அடைந்தார். அதுகண்ட தாயத்தார் மனம் தளர்ந்தனர். தனது மருமகனைக்கட்டித் தழுவிய தனபதி செட்டியார். 'ஐயகோ! வறியவர் ஆனீர்களே! காதிலே குண்டலங்களைக்காணேன். மற்ற அணிகலங்களைக் காணேன். வெறும் உடம்பைக் காண்கின்றேன்' என்று வாய்விட்டு அழுதார். பின் தாயத்தார் வழக்கு தோற்றுப் போகும்'' என்றான். பின் இறைவனும் மாணிக்கம் விற்ற நமது வைசிய குலத்தலைவரே இவ்வழக்கை தீர்த்து அருளும் என்றார். இறைவனே மாணிக்கம் விற்க மதுரையம்பதிக்கு வந்தவர் அன்றோ! தற்பொழுது சோமசுந்தரக்கடவுளே தனபதி செட்டியாராக வந்து ஒன்றும் தெரியாதது போல், அழைக்கிறார்.

''மங்கலமாட மோங்குமதுரை நாயகனை
நோக்கிச்
செங்கரஞ்சிரமேற்கூப்பி மாணிக்கந்தேற்றி
விற்கும்
எங்குலவணிகரேறேயெம்மனோர் வழக்கை
யிந்தப்
புங்கவரிடனாத் தீர்த்துத் தருகெனப்
புலம்பியார்த்தார்.''

சபையோரை நோக்கி, ''அரசனது செங்கோலாகிய நூல்கட்டிய தருமமாகிய தட்டிலே உங்கள் நாக்காகிய துலாக்கோலையிட்டு நமது வழக்கையும், தாயத்தார் வழக்கையும் சீர்தூக்கித் தீர்ப்பு சொல்லுங்கள்'' என்றார்.

இறைவனே நியாயத்திற்கும், தருமத்திற்கும் அதிபதி, அவரே வழக்காட வந்துவிட்டார். சபையோர்கள் இருபக்கமும் வழக்கை ஆராய்ந்து, தாயத்தார் வழக்கு பொய்வழக்கு எனக்கூற, தாயத்தார், 'தனபதி செட்டியார் இவரல்ல' எனச் சொல்ல செட்டியாரும் தாயத்தார்களின் அவரவர் குடிப் பெயரும் குணநலங்களும் கூற, தாயத்தார் நடுநடுங்கி வெளியேறினர். தருமசபையினரும் தனபதி செட்டியாரின் சொத்து முழுவதையும் மருமகனுக்கே அளித்து தீர்ப்பு கூறினார். தனபதி செட்டியாராக வந்த இறைவன் அனைவரும் காண மறைந்தார்.

என்னே! எம்பெருமானின் கருணை, அவர் தம் பெருமையை அளவிடல் எளிதோ!

# திருக்குடநீராட்டு விழா

தத்துவம்


டாக்டர் சாயிமாதா சிவபிருந்தாதேவி
திலகவதியார் ஆதீனம், புதுக்கோட்டை.


இறைவனை, எங்கும் நிறைந்தவர் என்றும், எப்போதும் நிலையாய் இருப்பவர் என்றும், அஞ்ஞானத்தை நீக்குகிறவர் என்றும், சாத்திரதோத்திரங்கள் கூறுகின்றன.

விண்ணகத்து வித்தகனை, மண்ணகத்துக் கொண்டு வந்து, மனிதன் கண்ணகத்துக் காட்டுவன நமது திருக்கோயில்கள்.

இவ்வுண்மைத் தத்துவத்தை, திருவுருவங்களின் வாயிலாக நாம் அறியலாம்.

இறைவனுக்கு அருவ வழிபாடும், அருவுருவ வழிபாடும், உருவ வழிபாடும் ஆகமூன்று வகையான வழிபாடுகளும், ஆலயங்களில் தினமும் நடப்பதை நாம் நன்கறியலாம்.

பரவெளியில் மந்திரங்களைச் சொல்லி, வழிபடுவது அருவ வழிபாடாகும்.

நமக்கு முன்னே, நூல்களால் சுற்றப் பெற்றுப் புனித நீரால் நிரப்பப் பெற்ற கும்பங்களிலும், யாக குண்டங்களிலும், செய்யப் பெறுவது அருவுருவ வழிபாடாகும்.

பிம்பங்களில், அதாவது திருவுருவங்களை கண்டு தொழுவது உருவ வழிபாடாகும்.

அருவ வழிபாடு ஞானியர்க்கும், அருவுருவ வழிபாடு பக்தர்களுக்கும், உருவ வழிபாடு ஏனைய எல்லோருக்கும் எனக் கொண்டாலும் சமயாச்சாரியர்கள் நால்வரும் அறுபத்து மூவரும், ஆழ்வார்கள் பன்னிருவரும், திருக்கோயில்களுக்குச் சென்று, 'நிலை பெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா' என வழிபாடு செய்தனர்.

''உள்ளம் பெருங்கோயில்

ஊனுடம்பு ஆலயம்'' எனக் கண்டவர்களும் திருக்கோயில் சென்று ஆலயத்தைச் சுற்றி வந்து தான் சானித்யம், பெரும்பேறுகள் பெற்றனர்

அருவுருவமாக இருக்கும் சிவலிங்கமும், கும்பமும் ஒற்றுமையுடையவையாக இருக்கின்றன.

சிவலிங்கத்தைப் போலவே குடமும், மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம் கலை என்னும் ஆறு அத்துவாக்களின் வடிவமாகும். அதுவே, சிவசக்தியின் சொரூபமாகவும் இருக்கின்றது.

இறைவனிடத்து, எல்லா சிவசக்திகளும் அடங்கியிருப்பது போலவே கும்பத்துள் உள்ள நவரத்தினங்களில் மனோன்மணி முதலான ஒன்பது சக்திகளும் அடங்கியிருக்கின்றன.

கும்பத்தின் உள் கூர்ச்சரத்தில் அடி, நடு, முடியில் இச்சா, கிரியா, ஞான சக்திகளும் இருக்கின்றன.

கும்பத்தில் சுற்றியிருக்கும் நூலில் உள்ள இழைகளில், சரஸ்வதி, லட்சுமி, பார்வதி ஆகிய முப்பெரும் சக்திகளும் இருக்கின்றனர். கும்பத்துள் வைக்கப் பெறும் ஸ்வர்ண புஷ்பம், சதாசிவமூர்த்தி, கும்பத்தின் மேலுள்ள வெளி கூர்ச்சரத்தின் அடி நடு முடியில்; பிரம்மா, விஷ்ணு ருத்திரன் இருக்கின்றனர். கும்பத்தின் மேலுள்ள

தேங்காய் - மகேஸ்வரமூர்த்தி மாவிலை கங்கை.

கும்பத்தின் கீழே பரப்பியுள்ள ஏழு தானியங்கள்:—

| | | |
|---|---|---|
| நெல் | — | ரிஷப தேவர் |
| அரிசி | — | குமரன் |
| உளுந்து | — | அக்னி |
| கோதுமை | — | சந்திரன் |
| துவரை | — | குபேரன் |
| பயறு | — | வருணன் |
| எள் | — | தேவி |

இவ்வாறு, கும்பத்தில் சிவலிங்கத்தைப் போல, எல்லாத் தேவர்களும் இருக்கின்றனர்.

அடுத்து யாக சாலையைச் சிந்திப்போம். யாகசாலா என்பது :—சுகத்தின் பொருட்டு, ஒடுங்கும் இடத்திற்கு, ஞானத்தால் செல்லுவது என்பது பொருளாகிறது.


யாக சாலையில், ரூத்திர சூத்திரம், விஷ்ணு சூத்திரம், பிரம்ம சூத்திரம், கண சூத்திரம், கலா சூத்திரம், மனுசூத்திரம், ரவி சூத்திரம், பங்கதி சூத்திரம் என்ற எட்டு வகைகளில் குண்டங்கள் அமைக்கப்பெறும்.

இவைகள் முறையே 64, 44, 34, 16, 12, 10, 33 என்ற எண்ணிக்கையில் குண்டங்களை அமைப்பார்கள்.

இக்குண்டங்கள் நாற்கோணம், அரசிலை, அரைச்சந்திரன், முக்கோணம், தாமரை, வட்டம் அறுகோணம், எண்கோணம் ஆகியவைகளில் அமைக்கப் பெறும். இந்த யாக குண்டங்கள், மண் முதல் நாதம் ஈறாக 36 தத்துவங்களின் ஸ்வரூபமாகும் அல்லது உருவமாகும்.

இக்குண்டங்களில், அஷ்டமூர்த்திகளாகிய சமாமூர்த்தி, மாதேவர், சர்வர், ஈசானர், பசுபதி, ருத்திரர், உக்கிரர், பீமர் என்பவர்கள் பூஜிக்கப் பெறுகின்றனர் முப்பத்து முக்கோடி தேவர்களும் யாக சாலையைச் சூழ்ந்து நிற்கின்றனர். (தொடரும்)


வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை-600034
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், M.A., Ph. D.,
அச்சிட்டோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002



கோவைக்கருகில உள்ள மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் ஆலயத் திருப்பணி தொடக்க விழா, மற்றும் தங்கத்தேர் திருப்பணி தொடக்க விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் செ.அரங்கநாயகம் அவர்களும், மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் திருமிகு ஆனந்தன் அவர்களும், பேரூர் ஆதீனம் தவத்திரு சாந்தலிங்க அடிகளார், மற்றும் நம் அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு சி. கே. கரியாலி, ஐ. ஏ. எஸ். அவர்களும் இத்திருப்பணி தொடக்க விழாக்களில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரி - துணை ஆணையாளர் திரு ஜி. பக்கிரிசாமி பி.எஸ்சி., பி.எல்., உடன் உள்ளார்.



உ

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் : : சமயபுரம்

## இலால்குடி வட்டம் திருச்சி மாவட்டம்

11—4—1993-ஆம் தேதி முதல் 23—4—1993-ஆம் தேதி வரை
நடைபெறும் முக்கிய திருநாட்கள் விபரம்

| | | |
|---|---|---|
| 11—4—1993 | ஞாயிற்றுக்கிழமை | கொடியேற்றம் |
| 19—4—1993 | திங்கட்கிழமை | வெள்ளிக்குதிரை வாகனம் |
| 20—4—1993 | செவ்வாய்க்கிழமை | திருத்தேர், தேர் வடம் பிடித்தல் (காலை 10-30 மணிக்கு மேல் காலை 11-00 மணிக்குள்) |
| 23—4—1993 | வெள்ளிக்கிழமை | தெப்ப உற்சவம் (இரவு 8-30 மணி முதல் இரவு 10-30 மணி வரை) |

பக்தர்கள் அனைவரும் திருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு அருள்மிகு மாரியம்மன் திருவருளுக்குப் பாத்திரராகுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பராசர ஆர். திருவேங்கடபட்டர்**
சுழல்முறை அறங்காவலர்

**ஜி. இராஜநாயகம், பி.ஏ.,பி.எல்.**
துணை ஆணையர்/செயல் அலுவலர்/
தக்கார் (கூடுதல் பொறுப்பு)